விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ==== Valampurii

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 15 திங்கட்கிழமை (28.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

# ஒன்றுபட்ட இலங்கைக்குள்

# தமிழருக்கு உரிமை கிடைக்காது

## தமிழரசுக்கட்சி மாநாட்டில் சம்பந்தன்

(மட்டக்களப்பு)

ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)





மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டுக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

## ஐ.நா. பிரதிநிதிகளை இலங்கைக்குள் அனுமதித்தால்

## சூடானுக்கு நடந்த கதிதான் இங்கும் ஏற்படும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதியிடம் மகஜர்

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகளை இலங்கையினுள் அனுமதிக்கக் கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தால் கையளிக்கப்பட்ட மனுவிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதற்கு முன்னரும் சூடானில் யுத்தக்குற்றச்சாட்டுத் தொடர்பில் அறிக்கையிடுவதற்கு இவ்வாறான நிபுணர்குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சந்தேக நபர்களாக இருந்தாலும் அவர்களைத் தடுத்து வைக்க முடியாது

### அதிகாரப் பகிர்வில் அவசரப்படக் கூடாது-சரத்

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களாக இருந்தாலும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாவிட்டால் அவர்களைத் தடுத்து வைக்க முடியாது. (20ஆம் பக்கம் பார்க்க)



## மனித உரிமைகள் பேணப்படும் இலங்கையில் பாதுகாப்புத்தரப்பினர் குற்றமிழைப்பதில்லை!

### இப்படி கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்புதரப்பினர் சித்திரவதைகளில் ஈடுபட்டுவருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் கிடையாது என காவல்துறை பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. கடந்த பதினெட்டு ஆண்டுகளில் ஐந்து காவல்துறை உத்தியோகத்தர்களே குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒரு ஆண்டுக்கு ஒருவர் என்ற வீதத்தில் கூட குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்றார். மேலும், (20ஆம் பக்கம் பார்க்க)

## தனிமையிலிருந்த வயோதிபப் பெண் கொலை அச்சுவேலியில் கொள்ளையர் கொடூரம்

(கரவெட்டி)

தனிமையில் இருந்த வயோதிபப் பெண்மணிஒருவர் கொடூரமான முறையில் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டதுடன் வீட்டிலிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதி யான தங்க நகைகளும் கொலையாளிகளால் சூறையாடப்பட்டுள்ளது.

அச்சுவேலி தோப்பு பகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு அன்னமுத்து (வயது 70) என்ற வயோதிபப் பெண்ணே நேற்று அதிகாலை வேளை இவ்வாறு கொடூரமாக கொலை செய்யப்பட்டவராவார்.

பலாலி கிழக்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த குறித்த வயோதிபப் பெண் இடம்பெயர்ந்து கடந்த நான்கு வருடங்களாக பிரஸ்தாப வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

அண்மையில், இவரது மகன் ஒருவர் கனடாவிலிருந்து வந்து தாயாரைபார்த்து விட்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## ரிசாத்தின் அராஜகம் ஒழிக மன்னாரில் நேற்று முழக்கம்

(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு எதிராக அமைச்சர் ரிசாத் பதியுதீன், அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைக் கண்டித்து மன்னார் புனித செபஸ்ரியார் போராலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களுடன் இந்துக்களும் கலந்து கொண்டதோடு மத குருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், எஸ்.வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

## கல்முனைக்குச் சென்ற இந்தியத் தூதர் அசோக் கருத்து

(கல்முனை)

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகாலப் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

கல்முனைக்கு விஜயம் செய்திருந்த அசோக் கே காந்தா அங்குள்ள இருதயநாதர் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் பிரதி மேஜர் நிஸாம் காரியப்பரின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் செய்திருந்த இவர், அப் பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் கல்முனை நகர வர்த்தகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இதன்போது, இலங்கையின் இறையாண்மைக்கு எவ்விதத்திலும் பாதிப்புகள் ஏற்படாத வகையில், இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இந்தியா ஆர்வமாக இருக்கின்றது.

அத்துடன், இலங்கையின் இறையாண்மையை இந்தியா மதிக்கின்றது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அசோக் கே காந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மட்டக்களப்பு- திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் தலைமையிலான சமயங்களின் சமாதானத்திற்கான ஒன்றியத்தின் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் தூதுவர் கலந்துரையாடியுள்ளதுடன், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துள்ளார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதின் அவசியம் மற்றும் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் ஆகியன குறித்தும்இந்தியத் தூதுவரிடம் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் நீண்டகாலமாக விசாரணைக்காக காத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம், காணிப்பிரச்சினைகள் மற்றும் முஸ்லிம் மக்களின் வழிபாட்டு தலங்கள் தாக்கப்படுகின்றமை போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்த பிரதிநிதிகள் அசோக் கே காந்தாவுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன், மட்டக்களப்பு நகரில் காந்தி சதுக்கத்தில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேஜர் சிவகீதா பிரபாகரன் ஆகியோர் அவரை வரவேற்றனர். (ந-8-11)

## இலங்கையைச் சேர்ந்தவர் சென்னை விமான நிலையத்தில் மரணம்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் இலங்கையைச் சேர்ந்த நபரொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த லால்சிங் பரசுராம் (வயது 55) என்பவர் கடந்த 10 நாட்களுக்கு முன்பு சென்னைக்கு சுற்றுலா சென்றுள்ளார். நேற்று மதியம் நாடு திரும்பவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மாலை சென்னை விமான நிலையத்திற்கு சென்று அங்குள்ள பயணிகள் காத்திருக்கும் அறையில் தங்கியுள்ளார்.

இந்நிலையில் அங்குள்ள கழிவறைக்குள் சென்று நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வரவில்லை. இதனால் விமான நிலைய ஊழியர்கள் கழிவறைக் கதவை உடைத்து உள்ளே சென்றதும் அங்கு குறித்த நபர் பிணமாக கிடைத்துள்ளார். இதனால் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த நபர் மாரடைப்பால் இறந்தாரா அல்லது தற்கொலை செய்தாரா என்பது பற்றி பிரேத பரிசோதனையின் பின்னர் தான் தெரியவரும் என்று விமான நிலைய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ந-8,11)

## திருமணம் செய்ய மறுத்த காதலனின் மூக்கை அறுத்த காரிகை

(கொழும்பு)

26 வயதான இளைஞரொருவரின் மூக்கை 40 வயதான பெண்ணொருவர் கத்தியால் வெட்டி துண்டித்த சம்பவம் மாத்தறை கொடகும்புற பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பெண் கடந்த டிசம்பர் மாதம் தனது கணவரை விவாகரத்து செய்தவர் எனவும் இவ்வருடம் தன்னை திருமணம் செய்வதாக இந்த இளைஞர் அளித்த வாக்குறுதியை மீறியதால் அவரின் மூக்கை அப் பெண் கத்தியால் வெட்டி துண்டாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரும் தமது சட்டவிரோத உறவை சுமார் 6 வருடங்களாக தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் உதவியாளராக பணியாற்றும் மேற்படி இளைஞர் காயமடைந்த நிலையில் தெலியாய அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ந-8,11)

## உணவு ஒவ்வாமையால் 50 இராணுவத்தினர் வைத்தியசாலையில்

(மின்னேரியா)

மின்னேரிய இராணுவ முகாமில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உணவு ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட இராணுவத்தினரே இவ்வாறு ஒவ்வாமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக மின்னேரிய இராணுவ தலைமையகப் பேச்சசாளர் தெரிவித்தார்.

குறித்த இராணுவத்தினர் தற்போது ஹிங்குராகொட மருத்துவ மனையில் அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அவர்களுக்கு வயிற்றோட்டம், வயிற்று உபாதை மற்றும் அதிக காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக மருத்துவமனைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-8-11)

## ஊவா பல்கலைக்கு அமைச்சர் நிமல் விஜயம்

(பதுளை)

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்விற்கு அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா விஜயம் செய்துள்ளார்.

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி திட்டமிடல் பிரிவு மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட La- Saison- de tourism -2012 என்ற சுற்றுலா கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்வுகளை பார்வையிடுவதற்காகவே அமைச்சர் நிமால்சிறிபாலடிசில்வாவிஜயம்செய்திருந்தார்.

இக் கண்காட்சி கடந்த 25 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை மூன்று தினங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-36)

# வட, கிழக்கில் யுத்தத்தால் இழந்த காணிகளை மீளப்பெறும் சட்டத்திருத்தம் நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

## நீதி அமைச்சர் ஹக்கீம் உறுதியளிப்பு

(காத்தான்குடி)

யுத்த சூழல் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை இழந்த மக்களுக்கு அவர்களின் காணிகளை மீளப் பெற்றுக் கொடுக்கும் சட்டத்திருத்தமொன்றை மிகவிரைவில் அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சமர்பிக்கவுள்ளதாக நீதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

காத்தான்குடியில் புதிய காதி நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் காணிகளை குறைந்த விலையில் விற்பனை செய்தவர்கள், யுத்த சூழலின் போது காணிகளை பலாத்காரமாக இழந்தவர்கள் ஆகியோர் தங்களது காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாக ஆட்சியுரிமை மாற்றத்தை பெற்றுக் கொள்வது தொடர்பான சட்டத்திருத்தமொன்றை கூடிய விரைவில் நாடாளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் சமர்பிக்கவுள்ளேன்.

கடந்தகால யுத்தசூழல் காரணமாக தங்களது காணிகளை விட்டு இடம்பெயர்ந்தவர்கள், தற்போதைய சூழ்நிலையில் காணிகளை விட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டவர்கள், அச்சம் காரணமாக மிகக் குறைந்த விலைக்கு காணிகளை விற்பனை செய்தவர்கள் ஆகியோர் காணி உரிமையை இழந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்களின் காணிகளையும் சிலர் பின்னர் அடாவடித்தனமாக கைப்பற்றியுள்ளனர். பத்து வருடங்களாக காணியில் இருந்தவர்கள் சொந்தமாக்கிக் கொள்ளும் ஆட்சியுரிமை சட்டத்தின் மூலம், காணிகள் இவ்வாறு இழக்கப்பட்டுள்ளன. இதனை சீர்செய்யும் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

இவ்வாறு காணிகளை இழந்தவர்கள், காணி ஆட்சியுரிமை சட்டத்திருத்தத்தை கொண்டு வருவதன் மூலம் இழந்த காணிகளை மீளப் பெற்றுக் கொள்ளமுடியும். யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. இதன் மூலம் அனைத்துச் சமூகத்திற்கும் நன்மை கிடைக்கும்.

காதி நீதிமன்றங்களின் பௌதீக வளங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஒன்றாகவே காத்தான்குடியில் உள்ள இந்த காதி நீதி மன்றத்திற்கும் நிரந்தரமான கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் மாத்திரம் 14 காதி நீதிமன்றக் கட்டிடங்களை திறந்து வைக்கவுள்ள அதேவேளை, அடுத்த வருடமும் இவ்வாறு 14 காதி நீதிமன்றக் கட்டிடங்களை நிர்மாணிக்கவுள்ளோம் என்றார். (ந-8-11)



அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கு எதிராக நேற்று மன்னாரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

## 19 வயதுஇளைஞனின் வெறித்தனம் 8 வயதுச் சிறுமி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியல் 8 வயதுச் சிறுமி 19 வயது இளைஞனால் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாகவும் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனை தாம் கைது செய்துள்ளதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு கைது செய்யப்பட்ட இளைஞன் இன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமியை வன்புணர்வுக்குள்ளாக்கிய இளைஞன் அச் சிறுமியின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்

கலகலப்பு

மசாலா கபே

இலங்கை இந்திய ஒரே வெளியீடு

D.T.S

10.30, 2.30, 6.30

# இன்று ஒரு தகவல்

## இரண்டு மலைகள்

“உன்னிடம் கடுகளவு நம்பிக்கை இருந்தால் போதும்... ஒரு பெரிய மலையையே புரட்டலாம்'' என்றார் ஒரு பெரியவர்.

“அது எப்படி முடியும்?'' என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன்.

‘‘நம்பிக்கை ஊட்டுவதற்காக சிறிது மிகைப்படுத்திச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

“அப்படியில்லை. இந்தக் கதையைக் கேள்!'' என்றார் அவர்.

இது ஒரு சீனதேசக் கதை. பல ஆண்டுகள் சீன அதிபராக இருந்த மாசேதுங் பொதுக்கூட்டங்களில் மக்களுக்கு இந்தக் கதையைத்தான் சொல்வது வழக்கம்.

சீன தேசத்தின் ஷாங்காய் மாநிலத்தில் ஒரு சிறிய கிராமம். அங்கு வயதானவர் ஒருவர் தனது இரண்டு ஆண் பிள்ளைகளுடன் வசித்து வந்தார்.

அவர்களுடைய வீட்டு வாசலின் முன்வழியை இரண்டு பெரிய மலைகள் அடைத்துக் கொண்டிருந்தது.

எப்பாடுபட்டாவது அந்த இரண்டு மலைகளையும் இடித்துத் தள்ளி தரை மட்டம் ஆக்கிவிட முடியும் என்பது அந்தப் பெரியவருடைய நம்பிக்கை. உடனே செயலில் இறங்கினார்... இரண்டு பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டு கடற்பாறைகளை எடுத்து மலையை உடைக்க ஆரம்பித்தார்.

வயதான காலத்தில் பிள்ளைகளுடன் சேர்ந்து இவர் மலையை உடைப்பதை அந்த வழியால் செல்பவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு போனார்கள்.

அவர்களுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அந்தப் பெரியவரிடம் ஒருவர், ‘‘நீங்கள் செய்யும் வேலையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?'' மலை எவ்வளவு பெரியது... அதை நீங்கள் மூவரும் சேர்ந்து உடைத்துத் தள்ளிவிட முடியுமா? பேசாமல் இதைவிட்டு விட்டு வேறாதாவது உருப்படியான வேலை இருந்தால், அதை செய்யுங்கள்'' என்றார்.

பெரியவருக்கு ஆவேசம் வந்து விட்டது.

“நாங்கள் மூவர் என்று தானே இப்படிச் சொல்கிறீர்கள்? அதனால் என்ன? நானும் என் பிள்ளைகளும் ஆரம்பித்த இந்த வேலையை முடிக்க முடியாமல் நான் இறந்து விட்டால் என் பிள்ளைகளே இந்த வேலையைத் தொடர்ந்து செய்வார்கள்.

அவர்களும் இறந்து விட்டால் என் பேரப்பிள்ளைகள் இதைத் தொடர்வார்கள்.

இப்படி வாழையடி வாழையாக இந்த வேலை தொடரும். ஒரு கட்டத்தில் இந்த இரண்டு மலைகளும் தரைமட்டமாகும். ஆனால், ஒன்று இதுவொரு அங்குலம் கூட வளரப்போவதில்லை. நாங்கள் உடைக்க உடைக்க குறைந்து கொண்டே வரும்.

என்றாவது ஒருநாள் என் வாரிசுகள் இந்த மலையை தரை மட்டமாக்குவார்கள். வாசல் வழியை நன்றாக அமைத்து விடுவார்கள். அந்த நம்பிக்கை எனக்குண்டு என்று சொல்லிவிட்டு தொடர்ந்து மலையை உடைக்க ஆரம்பித்தார்.

இவருக்குப் போய் புத்தி சொல்ல ஆரம்பித்தோமே என்று புலம்பிக் கொண்டே வந்தவர்களும் போய் விட்டார்கள்.

மலை உடைக்கும் வேலை இரவுபலகாக தொடர்ந்து நடந்தது. இவர்கள் படும்பாட்டைப் பார்த்த கடவுள் இவர்களுக்கு உதவி செய்ய நினைத்தார்.

அவர்களுடைய உழைப்பையும் உழைப்பின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையையும் இரண்டு தேவதைகள் ஆக்கினார்.

ஒருநாள் இரவோடிரவாக அந்த இரு மலைகளையும் அகற்றும்படி உத்தரவிட்டார்.

ஒருநாட்காலையில் எழும்பி பார்த்தார்கள். மலை இருந்த இடம் காலியாக இருந்தது.

பெரியவரும் அவருடைய பிள்ளைகளும் மிக மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இந்தக் கதையின் விளக்கம் என்னவென்றால் அந்த இரண்டு மலைகளும் என்ன தெரியுமா? ஒன்று வறுமை- இன்னொன்று பற்றாக்குறை.

அந்த இரண்டு தேவதைகளும் யார் தெரியுமா? ஒன்று- உழைப்பு, இன்னொன்று- நம்பிக்கை.

பொதுமக்கள்தான்- கடவுள்.

திறமை- வலிமை- பொறுமை இவைதான் அந்தப் பெரியவரும் பிள்ளைகளும்.

உறுதியோடும் நம்பிக்கையோடும் செயற்பட்டால் எந்தவித தடையையும் உடைத்தெறிய முடியும் என்பது இக்கதையின் கருத்து.

ஒருவன் மது அருந்திவிட்டு வரும் வழியில் ஒரு பெரிய மலையில் தலையை முட்டிக்கொண்டு நின்றிருந்தான்.

அவ்வழியால் வந்த இன்னொருவன், ‘‘ஏன் இப்படி நிற்கிறாய்? பேசாமல் வீட்டுக்குப் போ'' என்றான்.

அதற்கு அவன், விபரம் தெரியாமல் பேசாதே... நான் தலையை எடுத்துவிட்டால் மலை சாய்ந்து விடும்.

அதுதான் நேற்றிலிருந்து இதைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நீதிக்காக குரலை ஓங்கி ஒலித்தவர் மன்னார் ஆயர்

## யாழ்.மறைமாவட்ட குருக்கள் மன்றம் அறிக்கை

(மன்னார்)

மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகைக்கு ஆதரவாக பல்வேறு தரப்புகளும் தமது கைகளை உயர்த்திக் கொண்டுள்ளன. மன்னார் செபஸ்தியார் பேராலயத்தினில் முன்னெடுக்கப்படும் கண்டனப் போராட்டத்திற்கு ஆதரவையும் இவ்வமைப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்களாகிய எங்களது இனத்துவ வாழ்வும் இருப்பும் கேள்விக்கு உள்ளாகியிருக்கம் இன்றைய சூழலில் தமிழ் மக்களது உரிமைகளுக்காக நீதியின் குரலை ஓங்கி ஒலிப்பவராகவும் மக்களது நாளாந்த பிரச்சினைகளை அஞ்சாது முன்வைப்பவராகவும் மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை திகழ்வதாக யாழ். மறைமாவட்ட குருக்கள் மன்றம் நேற்று முன்தினம் விடுத்துள்ள ஆதரவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை மக்களது துன்ப துயர வேளைகளில் எல்லாம் எப்பொழுதும் அவர்களுக்காக குரல் கொடுத்து வருபவர் என யாழ்.ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உண்மையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் நீதியும் உண்மையுமே தருமென்பதால் அவர் நீதிக்காக குரல் கொடுத்து வருகின்றார். அவரது முயற்சிகள் சிலரால் தவறாக அர்த்தப்படுகின்றது என்றுள்ளது.

ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றம், யாழ்.மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் மற்றும் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த நான்கு மறைக் கோட்டங்களும் தனித்தனியாக தமது ஆதரவை மன்னார் ஆயருக்கும் குருக்கள் துறவியரோடு பொது மக்கள் அனைவருக்கும் தெரிவித்துள்ளன.

அமைச்சர் றிசாத் பதியுதீன் பாராளுமன்றத்திலும் வெளியேயும் மன்னார் ஆயருக்கு எதிராக தெரிவித்துவரும் கருத்துக்கள் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

அத்தகையை சூழலில் தமது கண்டனத்தை வெளிப்படுத்தவும் மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகைக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தவும் மன்னாரில் முன்னெடுக்கப்படவிருந்த எதிர்ப்பு போராட்டத்தை தடுத்து நிறுத்த பொலிஸாரின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முயற்சிகள் பிசுபிசுத்துப் போயுள்ளது. நீதிமன்றம் எதிர்ப்பு போராட்டத்திற்கு தடை விதிக்க மறுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 65-70 | 80-100 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 135 | 170 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 35-40 | 30 | 30 | 35 |
| கோவா | -- | 60 | 60 | 60 |
| கரட் | 60 | 60 | 50 | 120 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 |
| புடோல் | 45 | 40 | 55 | 60 |
| வாழைக்காய் | 30 | 20 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-110 | 70-100 | 70 | 70-120 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | -- | 160 | 100 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 60 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 250 | 160 |
| போஞ்சி | -- | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 130 | 80 | 90 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 20-25 | 16-20 |

## இராசி பலன்

28.05.2012
(வைகாசி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சப்தமி முற்பகல் 9.55 மணிவரை
மகம் முன்னிரவு 8.50 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
அக்கினி நாள் முடிவு

**மேடம்** இனிமையான நாள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியம் கைகூடும்.

**இடபம்** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரும் நாள், உஷ்ண நிலையுண்டு.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள்,உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்,வருமானம் திருப்தி தரும், இழுபறியாக இருந்த காரியம் கைகூடும்.

**கடகம்** வாக்குமேன்மையுண்டு, உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், விழாக்களில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்யமுன்வருவர், எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், தொழில் முன்னேற்றகரமாக அமையும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், சேமிப்புக்கள் உயர்வடையும்,தொழில் வளர்ச்சி கூடும் நாள்,பயணங்களால் பலன் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், போசன சுகமுண்டு.

**தனுசு** தன்னம்பிக்கையோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** மகிழ்ச்சி வந்து சேர மயில்வாகனனை வழிபட வேண்டிய நாள்,குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்,உடல் நலனில் கூடிய கவனம் தேவை, சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,இனிய அனுபவங்கள் ஏற்படும், போசன நன்மையுண்டு.

**மீனம்** உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கொடுக்கல்-வாங்கல்களில் அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலை திருப்தி தரும்.

வளவன்

# மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளை ஊழியர் சேம நிதியம் நிராகரிக்கிறது

## ஊழியர் சேம நிதியத் திணைக்களம் அறிக்கை

எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டவாறு ஊழியர் சேம நிதியத்தினால் பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட மோசடியான நடவடிக்கைகள் எனும் தலைப்பில் வெளியான செய்தியை ஊ.சே. நிராகரிக்கிறது. அவரின் கூற்று நாட்டின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியத்தின் நற்பெயருக்கு களங்கத்தை விளைவிப்பதாலும் பொருளாதாரத்தின் உறுதித் தன்மையைப் பாதிப்பதாலும் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு ஊ.சே. நிதியம் தீர்மானித்தது.

அதன்படி ஊ.சே. நிதியம் 93 சதவீத நிதியினை அரச ஆவணங்களிலும் 6 சதவீதத்தினை பங்குச் சந்தையிலும் முதலிட்டுள்ளது. மிகுதி 1 சதவீதம் கம்பனி முறிகளிலும் குறுகிய கால அரச ஆவணங்களிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பங்குச் சந்தை முதலீடானது நீண்டகால இலாப நோக்கிலும் நிதியத்தின் நீண்டகால மூலதன அளவினை அதிகரிக்கும் நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் ஊ.சே.நிதியம் ஏனைய விடயங்களுடன் பங்குகளின் உள்ளகப் பெறுமதி, நீண்ட காலக் கண்ணோட்டம், மத்திய கால, நீண்ட காலப் பங்குப் பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்பு, கம்பனிகளின் நிர்வாகக் கட்டமைப்பு, எதிர்காலத் திட்டமிடல்கள், பங்குகளின் கிடைப்பனவு குறிப்பிட்ட துறையில் வளர்ச்சியும் வளரும் பொருளாதாரத்தினால் நிறுவனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களையும் கவனத்தில் கொண்டே முதலீடுகளை மேற்கொள்ளும். மேலும் உலகில் காணப்படும் பல்வேறு பாரிய நிதியங்களை போல் ஊ.சே. நிதியம் முதலீட்டுப் பட்டியலை பல்வேறு முதலீடுகளை இணைத்து அமைத்துள்ளது.

அந்த முதலீடுகள் பல்வேறு முக்கிய துறைகளான வங்கியும் நிதியியலும், பல்வகை குழுமங்கள், எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள், சுகாதாரம், நில்மும் ஆதனமும், தொலைத் தொடர்பு, பெருந்தோட்டம், வலு மற்றும் சக்தி, உல்லாசமும் ஓய்வும், வியாபாரமும் உற்பத்தியும் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கை இதுவரை பல்வேறு வெற்றிகளைத் தந்துள்ளது. 2011இல் ஊ.சே.நிதியம் அதன் பங்குச் சந்தை முதலீட்டில் இருந்து 2504 மில்லியன் ரூபாயையும் 2012இல் இதுவரையான காலப்பகுதியில் 1559 மில்லியன் ரூபாயையும் மூலதன இலாபமாகவும் பங்குலாபமாகவும் பெற்றுள்ளது.

ஊ.சே.நிதியத்தின் பங்கு மூலதனச் சொத்துப் பட்டியல் ஆகக் கூடுதலாக இருந்தபோது தேறாத பங்கு மூலதன இலாபமாக 19 பில்லியன் ரூபாயை கொண்டிருந்தது. ஆனாலும் அந்நேரத்தில் பங்குகளை விற்பனை செய்யாது ஊ.சே. நி.வைத்திருந்தது. ஏனெனில் நாடு வளர்ச்சியடையும்போது 4-5 வருடங்களில் மேலும் இலாபத்தை அதிகரிக்கலாம் என்னும் நோக்கில் ஆகும் எனலாம்.

முன்மதியுடைய முதலீடுகளாலும் ஆற்றல்மிக்க முகாமைத்துவத்தினாலும் 2010ஆம் ஆண்டிலும் 2011ஆம் ஆண்டிலும் மிக உயர்ந்த வட்டிவீதமாக முறையே 12.5சதவீதத்தினையும் 11.5 சதவீதத்தினையும் அறிவித்துள்ளது. இந்த வட்டி வீதங்கள் சாதாரண வைப்புகளுக்கு வழங்கும் வட்டி வீதத்தினை விட மிக அதிகமானதாகும்.

மேலும் ஆற்றல் வாய்ந்த முதலீட்டுத் தீர்மானங்கள் நடைமுறைக்கேற்ற விவேகமுள்ள நீண்டகால இலாபத்தைத் தரும் என ஊ.சே.நி. நம்பிக்கையுடன் உள்ளது. ஆகவே ஊ.சே.நி. அதனது இலட்சக்கணக்கான ஆர்வலர்களை இவ்வாறான நிந்தையான அரசியல் ரீதியான ஊக்கப்படுத்தப்பட்ட எதிர்மறையான பிரசாரங்களைக் கண்டு ஏமாற்றம் அடைய வேண்டாம் என கேட்டுக் கொள்கிறது என்று உள்ளது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# தப்ரபேன் நிறுவனத்தில் பதவி வகிக்க விஜேமான்னவுக்கு தற்காலிக தடை

தப்ரபேன் செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின பிரதம நிறைவேற்று அதிகார மற்றும் நிர்வாக இயக்குநராக டினால் விஜேமான்ன செயற்படுவதை நிறுத்துமாறு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) உத்தரவிட்டுள்ளது.

மே 23ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விடுக்கப்பட்டுள்ள இந்த உத்தரவில், த பினான்ஸ் நிறுவனத்தின் பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி வாங்கியமை தொடர்பான பங்கு கொள்வனவு குறித்து பிணையங்கள் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு விசாரணை முடியும்வரை, தப்ரபேன் சார்பாக வேறு எந்த பதவிகளிலும் அவர் செயற்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தப்ரபேன் செக்கியூரிட்டிஸ் மற்றும் த பினான்ஸ் கம்பனி ஆகிய இரண்டிலும் பதவிகளை வகித்த விஜேமான்ன, த பினான்ஸ் நிறுவனத்தில் உள்ள தனக்குச் சொந்தமான பங்குகளை தேசிய சேமிப்பு வங்கிக்கு விற்பனை செய்தமை சர்ச்சையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவாசம் பதவி விலகியதை அடுத்து, தேசிய சேமிப்பு வங்கியின் பதில் தலைவராக தற்போது தபால் மா அதிபராகக் கடமையாற்றும் ரோகண அபேரத்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

# மோட்டரோலாவை கூகுள் வாங்கியது

மோட்டரோலா செல்போன் நிறுவனத்தின் முழுப்பங்கையும் 12.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கு (1இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய்) கூகுள் நிறுவனம் வாங்கியது. கடந்த 14 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட கூகுள் நிறுவனம், தற்போது உலக அளவில் மிகவும் பிரபலமான தேடுதல் தளமாக விளங்குகிறது. இந்நிறுவனம் செல்போன் தயாரிப்பு நிறுவனமான மோட்டரோலாவை வாங்க 9 மாதங்களுக்கு முன் திட்டமிட்டது.

இந்நிலையில் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் கொடுத்து மோட்டரோலாவின் முழுப்பங்கையும் கூகுள் வாங்கியுள்ளது. மேலும் மோட்டரோலாவின் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) இருந்த சஞ்சய் ஷா பதவி விலக முடிவு எடுத்ததைத் தொடர்ந்து, அதன் புதிய தலைமை செயலதிகாரியாக டெனிஸ் யூட்சை நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் தங்கள் நிறுவனத்துடன் இணைந்து சஞ்சய் ஷா பணிபுரிவார் என்று கூகுள் தலைமை செயல் அதிகாரி லாரி பேஜ் தெரிவித்தார்.

# செலான் வங்கியின் யாழ்.கிளைக்கு விருது

செலர்ன் வங்கியின் விருதுகளில் Performance Awards இம்முறை செலான் வங்கியின் யாழ்.கிளைக்கு Financial KPT's Award கிடைத்துள்ளது.

இலங்கை முழுவதும் 100 கிளைகளையும் 36 விரிவாக்கற் கிளைகளையும் கொண்ட செலான் வங்கி யாழ். மாவட்டத்தில் நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தில் கிளைகளையும் மானிப்பாய், சங்கானை ஆகிய பிரதேசங்களில் விரிவாக்கற் கிளைகளையும் கொண்டு இயங்குகின்றது.

செலான் வங்கியின் யாழ். கிளை கடந்த வியாழக்கிழமை தனது 10-வது ஆண்டு நிறைவை கொண்டாடியது.

இந்த வங்கியானது, ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு நிலையான பணவைப்பைக் கொண்ட கணக்கு நிலுவைகளுக்கு 14 வீத வட்டி வழங்குகின்றது.

27 ஊழியர்களைக் கொண்ட யாழ். கிளை தனது ஆண்டு நிறைவு முன்னிட்டு வாடிக்கையாளருட ன் நட்புறவை பேணும் வகையில், ஞாயிற்றுக்கிழமை 19 ஆம் திகதி சந்திப்பினையும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுன்னாகத்தில் லங்கா ஓறிக்ஸ் லீசிங் கம்பனியின் கிளை திறப்பு



லங்கா ஓறிக்ஸ் லீசிங் கம்பனியின் 167-வது புதிய கிளை கடந்த புதன்கிழமை சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

லங்கா ஓறிக்ஸ் லீசிங் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிறட்லி டி.சில்வா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தக் கிளையினைத் திறந்து வைத்தார். அத்துடன் சிறப்பு விருந்தினராக கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரி அஸன் நிஸங்க கலந்து கொண்டார்.

இலங்கை முழுவதும் 167 கிளைகளைக் கொண்டுள்ள கம்பனி யாழப்பாணத்தில் 4 கிளை நிலையங்களைகக் கொண்டுள்ளதாகவும், சாவகச்சேரி மற்றும் நெல்லியடியிலும் இரண்டு கிளைகள் கடந்த புதன் கிழமை திறக்கப்பட்டுள்ளதாகவும், லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிறட்லி டி சில்வா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுன்னாகம் கிளை யின் முகாமையாளர் ஆர். சுதாகரன், லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விமானம் தயாரிக்கிறது மஹிந்திரா

இந்தியாவின் மிகப்பெரிய வாகன தயாரிப்பு நிறுவனமான மஹிந்திரா விமான தயாரிப்பு துறையிலும் இறங்கியுள்ளது. தனது துணை நிறுவனமான மஹிந்திரா ஏரோஸ்பேஸ் மூலம் விமானம் தயாரிக்ககவுள்ளது.

அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிப்ஸ் ஏரோ நிறுவனத்துடன் சேர்ந்து சிறிய ரக விமானங்களை மஹிந்திரா தயாரித்து சோதனை நடத்தி வருகிறது. ஜிஏ-10 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய குட்டி விமானத்தின் முதல் சோதனை ஓட்டம் அவுஸ்திரேலியாவில் கிழக்கு விக்டோரியா மாகாணத்தில் உள்ள லாட்ரோப் விமான தளத்தில் நடந்தது.

ஒற்றை எஞ்சினில் இயங்கும் இந்த விமானம் பல்முனை பயன்பாட்டு வசதிகளைக் கொண்டதாக இருக்கும். பயணிகள் சேவை மற்றும் சரக்கு ஏற்றிச் செல்வதற்கு மட்டுமின்றி ராணுவ கண்காணிப்பு, ஆய்வுகளுக்கும் பயன்படுத்த முடியும். வரும் 2014 ஆம் ஆண்டில் இந்தியாவில் இந்த விமானத்தை வாங்குவதற்கு ஏதுவாக விரைவில் முன்பதிவையும் ஆரம்பிக்க மஹிந்திரா திட்டமிட்டிருக்கிறது.

இந்த புதிய விமானம் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளதன் மூலம் விமான தயாரிப்பு துறையில் மஹிந்திரா புதிய மைக்கல்லை எட்டியுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5222.09 | 5009.67 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4693.59 | 4526.13 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 1,787.59 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ)** சிங்கபுத்திர பினான்ஸ்(85.00), கூஜே(70.00), டுனாமிஸ் கப்பிரல்(9.00), சிடிஜசி(240.00), சிடிபி(x )(44.70).

**சரிவடைந்த பங்குகள்(ரூ)** சிரஸ் லிசா(0.30), பின்லே கொழும்பு (206.10), தப்ரபன்(5.30), ஈகுவிட்டி(26.10), சிரஸ் வாஸ்ஹடுவ(5.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.57 | 132.25 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 200.96 | 207.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.48 | 166.35 |
| சுவிஸ் பிராங் | 133.10 | 138.60 |
| கனேடிய டொலர் | 124.49 | 129.35 |
| அவுஸ்திரேலிய டொலர் | 124.54 | 129.74 |
| சிங்கப்பூர் டொலர் | 100.09 | 103.86 |
| ஜப்பான் யென் | 1.60 | 1.66 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.34 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.40 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கிளிநொச்சி ஊடகவியலாளர் சங்கத்தின் அறிமுக நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் அறிமுக நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் திருலோகமூர்த்தி தலைமையில்இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யுத்தத்தின் போது கொல்லப்பட்ட சக ஊடகவியலாளர்களுக்கு பொது மக்களும் அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சீர்ணிவாசன், அரச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இதன்போது இச்சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள்வருமாறு,

முழுநேர மற்றும் பகுதி நேரமாகவும் ஊடகத்துறையில் பணியாற்றிவரும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் இச்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றார்கள்.

யுத்தத்தின் முழுமையான பாதிப்புக்களை சுமந்த ஊடகவியலாளர்களாக கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள் காணப்படுகின்றனர்.

அவர்கள் இன்னும் பொருளாதார ரீதியாக பலவீனமாகவே உள்ளதாகவும் ஒரு சிறிய புகைப்படக்கருவி கூட இல்லாமல் ஊடகப் பணி செய்துவருகின்ற பலர் உள்ளதாகவும் தெரிவிக்கும் சங்கத்தினர் பொருளாதார மற்றும் இதர நலன்களை அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களை பலப்படுத்த வேண்டும் எனவும் அப்போது தான் அவர்கள் ஊடகத்துறையில் சிறந்து விளங்க முடியும் எனவும் குறிப்பிட்டனர்.



மேலும் தற்போது ஊடகத்துறையில் பெண்கள் உட்பட இளையவர்கள் அதிக ஆர்வத்தோடு வருவதால் அவர்களை ஊக்குவிக்க வேண்டிய தேவையும் அதிகம் உண்டு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கார்த்திகேயன் மற்றும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதி, முல்லைத்தீவு மாவட்ட சுதந்திர ஊடக அமைப்பின் தலைவர், திணைக்களங்களின் உயரதிகாரிகள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-7-9)

# வடமாகாண தமிழ்த்தினப்போட்டியில் யாழ். மாவட்டம் முதலாமிடம்

(பூந்தோட்டம்)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற வடமாகாண தமிழ் மொழித்தின போட்டியின் புள்ளிகளின் அடிப்படையில் யாழ். மாவட்டம் முதல் இடத்தை பெற்றுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியின் மாவட்ட ரீதியான புள்ளிகள் வருமாறு,

முதலாமிடம்- யாழ். மாவட்டம் 202 புள்ளிகளையும் இரண்டாமிடம்- வவுனியா மாவட்டம் 113 புள்ளிகளையும் மூன்றாம் இடம் - மன்னார் மாவட்டம் 69 புள்ளிகளையும் நான்காம் இடம்- முல்லைத்தீவு மாவட்டம் 50 புள்ளிகளையும் ஐந்தாமிடம் - கிளிநொச்சி மாவட்டம் 40 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (அ-3-266)

# கற்பனை அறிக்கைகளை வெளியிடுகிறார் சரத்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு இருப்பதாகக் கூறுவது ஓர் அப்பட்டமான பொய் எனவும் சரத் பொன்சேகா சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கதைக்கும் ஒருவர் எனவும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் செய்தி ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப்பு பிரஜைகள் எனக்கூறிய சரத்பொன்சேகா இன்று தமிழ் மக்களின் நல்வாழ்வில் தான் அக்கறை கொண்டவராகவும் அவர்களுக்காக பரிந்து பேசுபவராகவும் தன்னை காட்டிக்கொள்ள முயல்கின்றார்.

யுத்தம் முடிந்து இரத்தம் காய்வதற்கிடையில் ஏ-9 பாதை திறக்கக்கூடாது எனக் கூறியவரும் இந்த சரத் பொன்சேகாவே. இறுதி வெற்றிக்கு தான் தான் பொறுப்பு எனக் கொட்டமடித்த இந்த பொன்சேகா இன்று யாழ். சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவதாக கூறுகின்றார். இவ்வாறான கருத்துக்களை நான் முற்றாக மறுக்கின்றேன் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் கருத்துக்களை சில பொறுப்பற்ற ஊடகங்கள் தூக்கிப்பிடித்து பிரசுரிக்கின்றன. இதே ஊடகங்கள் தான் முன்னர் யுத்தம் நடந்தபோது பொன்சேகாவை தாறுமாறாக வசைபாடி எழுதின என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

சில வருடங்களின் பின்னர் அவர் வெளியே வந்திருக்கின்றார்.

தன்னை மக்களிடையே நிலைநிறுத்த அவர் இதுபோன்ற சில அறிக்கைகளை ஊடகங்களில் விட முயற்சிக்கின்றார். அவை யாவும் கற்பனை தவிர உண்மை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொன்சேகாவுடனான தொடர்பு குறித்து தீர்மானிக்கப்படவில்லை

## கூட்டமைப்பு அறிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனான தொட ர்பு குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என தமிழத் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. சரத்பொன்சேகா விடுதலை செய்யப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியலில் தமது பங்கு குறித்து சரத் பொன்சேகா இன்னமும் தெளிவான தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சரத்பொன்சேகாவின் தீர்மானத்தின் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது தீர்மானத்தை அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.கடந்த வாரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திலேயே கூட்டமைப்பு கூடுதல் கவனம் செலுத்தியதாகவும் சரத்பொன்சேகா விவகாரம் பற்றிக் கவனிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

## அமரர் சாம்பசிவக்குருக்கள் இராஜேஸ்வரி



நிகழும் நந்தன வருடம் வைகாசி மாதம் 4 ஆம் நாள் (17.05.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த, அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரம்பரை சிவாச்சாரியார் குடும்பத் தலைவி அமரர் சாம்பசிவக் குருக்கள் இராஜேஸ்வரி அம்மா அவர்களின் ஆத்ம சாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற உள்ளது.

தசாகம்:-26.05.2012 சனிக்கிழமை காலை 10 மணிக்கு

மாசியம்:- 27.05.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

சபிண்டீகரணம்:- 28.05.2012 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு

சமராதனை:-29.05.2012 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு

மேற்படி நிகழ்வுகளில் உற்றார்,உறவினர் மற்றும் அம்பிகை அடியார்கள் அனைவரையும் கலந்து அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனையிலும் பங்கு கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மகள், பெறாமக்கள்
அம்பாள் பரிபாலன சபையினர்

(8512)

# இலங்கையின் சனத்தொகை 20.2 மில்லியன்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 30 வருடங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்படி இலங்கையின் சனத் தொகை 20.2 மில்லியன் என்று தெரியவந்துள்ளது. இந்தத் தரவினை உத்தியோகபூர்வ தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன்படி 14.9 மில்லியன் மக்கள் சிங்களவர்கள் என்று தெரியவந்துள்ளது. வருடந்தோறும் சனத்தொகையில் 220 ஆயிரம் பேர் அதிகரித்து வருகின்றனர். இந்நிலையில் எதிர்வரும் 2041 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்த சனத்தொகை 24 மில்லியன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தற்போதைய சனத்தொகை 997,754 பேராகும். இதில் 934, 392 பேர் தமிழர்கள் ஆவார்கள். 21 ஆயிரத்து 860 பேர் சிங்களவர்கள். 32 ஆயிரத்து 659 பேர் முஸ்லிம்கள் ஆவர்.

இந்தக் கணக்கெடுப்பின் படி முஸ்லிம்களின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வடக்கு கிழக்கிலேயே வசிக்கின்றனர். இதில் கிழக்கிலேயே அதிக முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இந்த நிலையில் கிழக்கில் தமிழ் சிங்கள மற்றும்முஸ்லிம்களின் சனத்தொகை சமமாகவே உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை இந்த சனத்தொகை கணக் கெடுப்பு அறிக்கை இறுதிப்படுத்தப்பட்டு அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக இலங்கை புள்ளி விபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் பின்னர் அது மூன்று பிரிவுகளாக வெளியிடப்படவுள்ளது. (அ-2)


டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் பாவனைக்கு உட்படுத்தி தரப்படும்.

No. 06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

TP:- 021 2228680,
077 5925088, 075 0407430

(8508)


# ஆறாத்துயருடன் நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் மகேந்திரன் வரதன்



நான்காவது வருடம் ஓடிப்போனதுவே தம்பி ஐயா!
உங்களின் பிரியாத்துயர் ஆற்றுவார் இல்லையோ!
கண்ணீரில் அலைகள் கரை மீறுகின்றனவே!
விழிமூடித்தூங்க முடியாது வேதனையால்
தவிக்கின்றோம் உன்பாச உறவுகள் மீண்டும் ஓர்
பிறப்பெடுத்து வாரும் தம்பி ஐயா-எமக்குத் தம்பியாய்!
எம்மை விட்டுப்பிரிந்து நான்காவது ஆண்டு
காலங்கள் எத்தனை தான் கடந்தாலும்
நிதம் உன் நினைவால் வாழும் நாம்
கனவில் தேடி காணும் உன் முகத்தை
நிஜத்தில் தேடி அலைக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

திதி:-28.05.2012


அன்னையின் மடியில்
09.11.1980

ஆண்டவன் அடியில்
28.05. 2008

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அக்கா,அத்தான்,ரஜீனா,
மாமாமார் மாமிமார்,
மச்சாள்,மச்சான்மார்

மாவடி சந்தி,
1 ஆம் ஒழுங்கை,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(8524)



சுட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் 2010, 2011 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## பெருமஞ்ச நாயகனே... இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பெருமஞ்ச நாயகனே இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவிலில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சிவஸ்ரீ உ. அபராஜிதக்குருக்கள், வாழ்த்துரையினை யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறைத்தலைவர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையை ஆசிரியர் மகாலிங்கசிவம் ஆற்ற முதற்பிரதிகளை டாக்டர் கே. பாலசுப்பிரமணியம், அண்ணா தொழிலக பொ. நடராஜா, பெஷன் ஹவுஸ் த.கந்தசாமி, ஈ.எஸ்.பி நாகரத்தினம் ஆகியோர் பெற்றுக்கொள்வார்கள்.

இந்நிகழ்வில் விசேட நிகழ்வுகளாக வி.ஆர். இராதாகிருஷ்ணனின் வயலின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. (அ-9)

## நியாயமான சம்பளத்தை வழங்குங்கள்!

(கரவெட்டி)

நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் தமக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் தற்பொழுது 23 கிளைச் சங்கங்கள், கோப்சிற்றிகள், எரிபொருள் நிரப்பு நிலையம், புத்தகக் கடைகள், புடைவைக்கடைகள் மற்றும் ஏனைய தொழில் நிலையங்களில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் தமக்கு நியாயமான சம்பளத்தை கூட்டுறவுச் சங்கம் வழங்க முன் வரவேண்டும் என கூறியுள்ளனர்.

ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படும் போது எமக்கு மட்டும் மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்படுகின்றதென ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் நீண்டகாலமாக பணியாற்றும் ஊழியர்களுக்கு நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை. நியாயமான சம்பளம் கிடைக்கர்மையினால் எமது குடும்பங்கள் மட்டும் வறுமையில் வாழ வேண்டிய நிலை உள்ளது என சுட்டிக்காட்டினர்.

எனவே எதிர்காலத்தில் நீண்ட காலமாக பணியாற்றும் ஊழியர்களுக்கு நியமனத்தையும் ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தையும் வழங்க நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முன் வரவேண்டும் என்று ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)




## போதனாசிரியர் தேவை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயகல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவினால் நடத்தப்படவிருக்கும் மாலைநேர எழுத்தறிவு வகுப்பிற்கு போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த. (உ/த) இல் தமிழ்மொழி உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வலய கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவில் நேரடியாக ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார். (அ)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## முத்தமிழ் விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி தமிழ் சங்கத்தின் இவ்வாண்டுக்கான முத்தமிழ் விழாவினை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கிடையில் நாடக மன்றத்தினால் நடத்தப்படும் நாடக திறன்காண் போட்டிகள் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் தனி நடிப்பு, நாடகப் பிரதி எழுதும் போட்டி என இரு போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, மேல்பிரிவு எனும் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இதில் தனி நடிப்பு மாணவர்கள் விரும்பிய தலைப்பில் ஐந்து நிமிடங்கள் வெளிப்படுத்த வேண்டும். இதன் கருப்பொருள் புத்தாக்க சிந்தனையுடன் புதிய படைப்பாக இருத்தல் வேண்டும்.

பொருத்தமான வேடப்புனைவுடன் மது, புகைப்பிடித்தல், பிச்சை எடுத்தல், ஆபாசம் சாராமலும் தனி நபர், மதம், இனம் என்பவற்றை புண்படுத்தாத வகையிலும் அமைய வேண்டும்.

அத்துடன் நாடகப்பிரதி எழுதும் போட்டியானது 10 முதல் 15 நிமிடத்திற்குட்பட்டதாக அமைய வேண்டும். தலைப்பு போட்டியின் போது வழங்கப்படும்.

மேற்படி போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் மாதம் நடைபெறும். கல்லூயரி ஆசிரியர்கள் அல்லாத நாடகத்துறை சார்ந்தவர்களாலேயே இறுதி மதிப்பீடு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. செம்பியன்பற்றில் உள்ள தேவாலயம் ஒன்றிற்கு ச்சென்றுவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மருதங்கேணியில் இருந்து செம்பியன் பற்றுக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் வேம்படி பகுதியைச் சேர்ந்த அன்ரன் சேவியர் (வயது-41) என்ற குடும்பஸ்தரும் கொலின் அஞ்சலோ (வயது-29) என்ற இளைஞரும் கிளிநொச்சி செல்வாநகர் பகுதியை சேர்ந்த லோறிராசா செபஸ்ரியன் ராஜ் ( வயது-19), செல்வக்குமார் ரஞ்சன் (வயது-19) ஆகியோரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-3-24)

## சடலமாக மீட்கப்பட்டவர் விபத்திலேயே பலியானார்

### பரிசோதனை அறிக்கையில் தகவல்

(கரவெட்டி)

வடமராட்சியில் வல்லை வெளியில் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும் பெருமாள் குறித்த இளைஞன் விபத்துச் சம்பவத்திலேயே உயிரிழந்ததாக உறுதிப்படுத்தியுள்ளார்.

கரவெட்டி மேற்கு வீரபாலன் தோட்டம் பகுதியை சேர்ந்த தனபாலசிங்கம் பத்மசங்கர் (வயது24) என்ற இளைஞனே சம்பவ தினம் இரவு நெல்லியடி பொலிசாரால் சடலமாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

## சிறுநீரக பரிசோதனை இடம்பெறாமையால் நோயாளர்கள் அவதி

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக பரிசோதனை இடம்பெறாமையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்ளை எதிர்கொள்கின்றனர். மேற்படி வைத்தியசாலையில் நீண்டகால மாக நடைபெற்று வந்த சிறுநீரக பரிசோ தனை சில தினங்களாக சீராக இடம்பெற வில்லை.

இவ்வைத்திய சேவையில் ஈடுபடும் பணியாளர்கள், நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறுநீரக பரிசோதனையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## பொதுஅறிவுப்போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் வாசகர்களுக்கான பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகலரையும் கலந்து பயன்பெறுமாறு நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## கடந்தாண்டுக்கான உதைபந்தாட்ட சம்பியனானது வதிரி டயமன்ஸ்

கரவெட்டி பிரதேச செயலகத்தின் இளைஞர் கழககங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணி 2011 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட சம்பியனாகியது.

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல்க்கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியனாகியது. (அ-2-24)

# "இயற்கையுடன் ஒன்றிணைவோம்" ④

*சேதனப் பசளை உற்பத்தியை முற்கூட்டியே ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவும் போகத்திற்கு முன்னரான பயிர்ச் செய்கைத் திட்டமிடலிற்காகவும் மற்றும் MSc கற்கை நெறியின் அபிவிருத்திக்குரிய இதழியல் (Developmental Journalism) பாடத்தின் ஓர் அம்சமாகவும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

வயலில் உள்ள வைக்கோலை மீண்டும் நிலத்துக்கு இட்டு மண் வளத்தைப் பெருக்குவதோடு உரத்திற்காக செலவிடும் பணத்தின் ஒரு தொகையை மீதப்படுத்த முடியும். நிறைவான விளைச்சலோடு வயலின் மண் வளத்தையும் பாதுகாக்க முடியும். உற்பத்திச் செலவில் அசேதன உரத்திற்காகச் செலவிடும் பணத்தை மீதப்படுத்த முடியும்.

கருக்கப்பட்ட உமியை பயன்படுத்துதல்

இலங்கையில் வருடாந்தம் 8.5 இலட்சம் ஹெக்டெயர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்படுகின்றது. 01 ஹெக்டெயரிலிருந்து சராசரியாக 4 மெ.தொன் விளைச்சல் பெறப்படுகின்றது. இதில் 68-70 % தானிய அரிசியாகவும் 30-32 % உமியாகவும் வெளியேற்றப்படுகின்றது. ஆகவே வருடாந்தம் 8.5 மெ.தொன் உமி உற்பத்தி செய்யப்படுகின்றது. உமியை கரியாக்கி வயலிற்கு இடும் போது அரிய சேதனப்பசளையாகும். சுற்றாடல் மாசுபடுவதை தடுக்கலாம். இது மண்ணை திருத்தும் ஒரு திருத்தியாகும். சிலிக்கனை வழங்கும். சிலிக்கனை நெல் உறிஞ்சுவதால் நோய், பீடைகளை எதிர்த்து வளரும். நெல் சரிந்து விழுவது தடுக்கப்படும்.

கருக்கப்பட்ட உமியை ஏக்கர் ஒன்றிற்கு 200-250 கி.கிராம் வரை இடுவதால் நெல் விளைச்சலை அதிகரிக்க முடியும்.

நெற் பயிரானது ஏறக்குறைய 40% நைதரசன் (N), 30-35 % பொசுபரசு (P), 80-85% பொட்டாசியம் (K), 40-50% கந்தகம் (S) ஆகிய போசணை மூலகங்களை வளர்ச்சியின் போது உறிஞ்சி முதிர்வின் போது பயிரில் சேமிக்கின்றது. நெல் அறுவடையின் போது மேற்கூறப்பட்ட போசணை மூலகங்கள் வயலிலிருந்து தொடர்ச்சியாக அகற்றப்படுகின்றன. இதனால் மண் வளம் காலப் போக்கில் குறைவடைவதோடு தொடர்ந்து வரும் பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படுகின்றது.

ஏக்கருக்கு 100 புசல் விளைச்சல் தரும் நெல் வயலில் அகற்றப்படும் போசணை அளவு

| போசணைச்சத்து | வைக்கோலில் அகற்றப்படும் போசணை (கிலோகிராம்/ஏக்கர்) |
|---|---|
| நைதரசன் | 14.8 |
| பொசுபரசு | 5.2 |
| பொட்டாசியம் | 6.4 |
| சிலிக்கா | 34.0 |

நெல் வயல்களில் வைக்கோலை சேதனப் பசளையாகப் பயன்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் சராசரியாக 4 தொன் வைக்கோல் கிடைக்கும். அதனை வயலில் மீள் இடுவதன் மூலம் 3-3 1/2 மாத இன நெல்லுக்கு சிபார்சு செய் யப்படும். மொத்தப் பசளைத் தேவையில் நைதரசன் 20% யும் பொசுபரசு 7 % யும் பொட்டாசியம் 100% யும் குறைக்க முடியும். அவ்வாறு வைக்கோலைப் பசளையாகப் பயன்படுத்தும் வயல்களுக்கான இரசாயன உரப்பாவனை வீதம் பின்வருமாறு சிபார்சு செய்யப்படுகின்றது.

✦ நன்கு உக்கலடைவதால் அதிகளவாக ஏற்றி செல்லலாம்.

✦ சிறந்த கூட்டெரு மணமற்றதாக இருக்கும் விரும்பிய இடங்களில் சேமிக்க முடியும்.

✦ கூட்டெரு தயாரிப்பானது குடிசை கைத்தொழிலாகவோ. சிறுகைத்தொழிலாகவோ மேற்கொள்ள முடியும்.

கூட்டெரு தயாரித்தல்

பல முறைகளில் கூட்டெருவைத் தயாரிக்க முடியும். காலநிலை பயன்படுத்தும் பொருட்கள் என்பவற்றிற்கேற்ப முறைகளைத் தெரிவுசெய்யலாம்.

01. குவியல் முறை 02. குழிமுறை

*நெல்லுக்கான சிபார்சு செய்யப்பட்ட பசளைப் பாவனை (நீர்ப்பாசன பயிர்)*

| நெல் இனம்/ வயது | சாதாரண நிலத்திற்கான சிபார்சு (கிலோ கிராம்/ஏக்கர்) | | | வைக்கோல் நிலத்திற்குள் தாழ்க்கப்படும் வயல்களுக்கான சிபார்சு (கிலோகிராம் / ஏக்கர்) | | |
|---|---|---|---|---|---|---|
| | யூரியா | பொசுபேற்று | பொட்டாசு | யூரியா | பொசுபேற்று | பொட்டாசு |
| 3 மாத இனம் | | | | | | |
| அடியுரம் (விதைக்க முன்) | 5 | 25 | 15 | 4 | 23.25 | -- |
| 1 ஆம் மேற்கட்டு (2 ஆம் கிழமையின் பின்) | 35 | -- | -- | 28 | -- | -- |
| 2 ஆம் மேற் கட்டு (6 ஆம் கிழமையின் பின்) | 50 | -- | 10 | 40 | -- | -- |
| 3 1/2 மாத இனம் | | | | | | |
| அடியுரம் (விதைக்க முன்) | 5 | 25 | 15 | 4 | 23.25 | -- |
| 1 ஆம் மேற்கட்டு (2 ஆம் கிழமையின் பின்) | 25 | -- | -- | 20 | -- | -- |
| 2 ஆம் மேற் கட்டு (5 ஆம் கிழமை) | 40 | -- | -- | 32 | -- | -- |
| 3 ஆம் மேற்கட்டு (7 ஆம் கிழமையின் பின்) | 20 | -- | 10 | 16 | -- | -- |
| 4-4 1/2 மாத இனம் | | | | | | |
| அடியுரம் (விதைக்க முன்) | 5 | 25 | 15 | 4 | 23.25 | -- |
| 1 ஆம் மேற்கட்டு (2 ஆம் கிழமையின் பின்) | 20 | -- | -- | 16 | -- | -- |
| 2 ஆம் மேற் கட்டு (5 ஆம் கிழமை) | 30 | -- | -- | 24 | -- | -- |
| 3 ஆம் மேற்கட்டு (8 ஆம் கிழமையின் பின்) | 35 | -- | 10 | 28 | -- | -- |

கூட்டெரு

தாவர, விலங்கு கழிவுகளை நுண்ணங்கிகள் மூலம் பகுதியாக சிதைவடையச் செய்து கூட்டெரு பெறப்படுகின்றது.

*கூட்டெருவின் நன்மைகள்*

✦ நன்கு உக்கலடைந்த நிலையில் பாவிக்கும் பயிரிற்கு உடன் போசாக்கை வழங்குகிறது.

✦ கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுவதற்கு சிறந்த முறையாகும்.

✦ காற்றாட்டல் முறையில் தயாரிக்கலாம்.

இலை குலைகள், விலங்கெரு, சமையலறைக்கழிவுகள், வீட்டுக்குப்பைகள், பயிர் மீதிகள், சாணி, மாட்டுச்சிறுநீர், பிரிந்தழியக் கூடிய தொழிற்சாலைக் கழிவுகள், சிறிதளவு யூரியா, உணவு, சந்தைக்கழிவுகள், சிறிதளவு பழைய கூட்டெரு, நீர் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி கூட்டெருவைத் தயாரித்துக் கொள்ளலாம்.

குவியல் முறை கூட்டெரு தயாரிப்பு முறை

அதிக மழையுள்ள பிரதேசத்திற்கு பொருத்தமானதும் இலகுவானதுமான முறையாகும்.

இதனை பின்வருமாறு தயாரித்துக் கொள்ளலாம். குவியல் சரிவதை தடுப்பதற்காக சிறிய குழியொன்றை 8 சதுர மீற்றர் ஆழம், 2 மீற்றர் நீளம், ஒரு மீற்றர் அகலத்தில் அமைக்குக. குவியலின் ஆகக் கூடிய உயரம் 1.5 மீற்றர் ஆக இருத்தல் வேண்டும்

செய்முறை

✦ மூலப் பொருட்களை சிறுசிறு துண்டுகளாக வெட்டவும். இதனால் சிதைவடைதல் இலகுவாகும்.

✦ மாட்டுச்சாணி, சிறுநீர், யூரியா அனைத்தையும் கலந்து கூழ்நிலை கரைசலாக்குக. இவை நுண்ணங்கிகள் பெருக அவசியமான போசணையை வழங்குகின்றது.

✦ அடிப்பகுதியில் வைக்கோல் அல்லது உமிப்படையை இடுக. இதனால் போசணைப் பொருள் கொண்ட கரைசல் மண்ணினுள் கசிந்து செல்வது தடுக்கப்படும்.

✦ இக்குழியை நிரப்புவதற்கு இலகுவில் உக்கலடையாத வீட்டுத்தோட்டத்தின் கழிவுகள், சமையலறைக்கழிவுகள் என்பவற்றை 15 ச.மீற்றர் தடிப்புடைய படையாக இடுக.

✦ இதன் மேல் ஏறத்தாழ 10 சதுர மீற்றர் தடிப்பில் இலகுவில் பிரிகையடையக் கூடிய இளமிலைகள், சமையலறைக்கழிவுகள் ஆகியவற்றை இடுக.

✦ இதன் மேல் கூடிய காபன் கொண்ட வைக்கோல் படையை இடுக.

✦ ஒவ்வொரு படையின் மீதும் கூழ் நிலைக்கரைசலை தெளித்தபின் அடுத்தப்படையை நிரப்பவும்

✦ ஒவ்வொரு படையின் மீதும் சிறிய துண்டுகளாக்கப்பட்ட வாழை மடல், வாழை துண்டுகளை இடுவதனால் அதன் ஈரப்பதனை பாதுகாக்க முடியும்.

✦ குவியலை உருவாக்கிய பின் அதனை கறுப்பு பொலித்தீனால் மூடிவிட வேண்டும். மூடிய பின் பாரமொன்றை வைக்கவும்

✦ இவ்வாறு தயாரிக்கப்பட்ட குவியலை நன்கு புரட்டி பின்வரும் ஒழுங்கில் கலந்து விடல் வேண்டும்.

✦ முதலாவது புரட்டல்-நிரப்பி 2 ஆவது வாரம்

**சுஜிதா சக்திவேல்**
விவசாய உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
கிளிநொச்சி

2 ஆவது புரட்டல்- நிரப்பி 4 வாரங்களின்பின்

3 ஆவது புரட்டல்- நிரப்பி 8 வாரங்களின் பின் 4 மாதங்களின் பின் கூட்டெருவாக பயன்படுத்தலாம். புரட்டும் போது சாணிக்கரைசல் அல்லது நீர் தெளித்து புரட்ட வேண்டும்.

கூட்டெருவை பயன்படுத்தல்

பயிர்ச்செய்கையில் நிலப்பண்படுத்தலுடனேயே ஒரு சதுர மீற்றர் பரப்பளவிற்கு அடிக்கட்டாக ஒரு கிலோ கூட்டெருவை இட வேண்டும். கனவளவடிப்படையில் 1.5 அடி விட்டமும் ஒரு அடி உயரமும் கொண்ட கடகமொன்றில் கொள்ளக்கூடிய கூட்டெருவை அண்ணளவாக 30 சதுர மீற்றர் பரப்பளவிற்கு பயன்படுத்தலாம். (முற்றும்).




கிளி/தர்மபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் வைத்திய அதிகாரி இ.தருமலிங்கம் அவர்களுக்கு சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன் போது திருமதி தருமலிங்கம் விளக்கேற்றுவதனையும் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் த.முகுந்தன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-வட்டக்கச்சி செய்தியாளர்)

# மன்னார் ஆயர் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்காக வத்திக்கான் செல்லவும் தயார்

## அமைச்சர் றிசாத் அறிக்கை



மன்னார் ஆயர் குறித்து நான் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோர என்னில் எவ்வித பிழையும் இல்லை. எமது தரப்பு நியாயங்களை சொல்ல கத்தோலிக்க திருச்சபையின் வத்திக்கானுக்கு செல்லவும் மனித உரிமை குறித்து ஜெனீவாவுக்கும் செல்வேன் என குறிப்பிட்டு அமைச்சர் றிசாத் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் றிசாத்தின் முகத்திரையைக் கிழிப்போம் என்ற அறைகூவலுடன் மன்னார் சமூக ஆர்வலர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மன்னாரில் இடம்பெயர்ந்த அமைப்பு என்று முகவரியிடப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் என்ற அனாமதேய அமைப்பு அறி க்கைகளை விட்டு வருவது குறித்து எனது கண்டனத்தை வெளிப்படுத்த விரும்புகின் றேன்.

இவ்வாறான சமூக ஆர்வலர்கள் மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு என்றும் முன்வந்ததில்லை. அவர்கள் தொடர்ச்சியாக மக்களுக்கு கிடைக்கும் அனைத்தையும் இல்லாமல் ஆக்கி மீண்டும் இன ரீதியான கலவரம் ஒன்று ஏற்பட வேண்டு என்பதிலேயே குறியாக இருக்கின்றனர் என்பதை சகோதர தமிழ் மக்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

துண்டுப் பிரசுரங்களுக்கு உரிமை கோரும் அளவுக்கு நாம் வங்குரோத்து அரசியல் செய்யவில்லை. மிகவும் நேர்மையாக தமிழ், கத்தோலிக்க, முஸ்லிம், சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டுள்ள அரசியலை தான் செய்து வருகின்றோம்.

தமிழ்மக்களை முஸ்லிம்களிடமிருந்து பிரித்து அதன்மூலம் தேர்தல் காலங்களில் பொட்டனி வியாபாரம் செய்யும் வியாபாரிகள் போன்று அரசியலிற்காக வாக்குச் சேர்க்க எடுக்கும் ஒரு அமைப்பாக மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் அமைப்பு செயற்படுகின்றது என்பது மட்டும் புலனாகின்றது என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மண்சரிவு அபாயம்

மீண்டும் மழை பெய்துவரும் நிலையில் ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, நுவரெலியா மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு இந்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களின் பள்ளத்தாக்கு களை அண்மித்த பகுதிகளில் வாழும் மக் கள் மண்சரிவு அபாயம் தொடர்பாக அவ தானமாக இருக்குமாறு தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மண்சரிவு பிரிவு அதிகாரி ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித் துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை, பெல்மதுல்ல, இரத்தினபுரி, கலவான ஆகிய பகுதிகளிலும் மாத்தறை மாவட்டத்தின் தெனியாய உள்ளிட்ட சில பகுதிகளிலும் கடும் மழையை அடுத்து மண்சரிவு ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார். (அ)

# சீனி மற்றும் உப்பு அளவு தொடர்பில் புதிய சட்டத்தை அமுலாக்க முடிவு

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

சந்தையில் உள்ள உணவுப் பொருட்களில் சீனி மற்றும் உப்பின் அளவு தொடர்பில் புதிய சட்டதிட்டங்களை அமுலாக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளொன்றுக்கு ஒருவருக்கு 5 கிராம் உப்பு தேவைப்படுகின்ற நிலையில் இலங்கையில் ஒருவரால் சராசரியாக 10 தொடக்கம் 15 கிராம் உப்பினை தாம் உட்கொள்ளும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதே வேளை தனி ஒரு நபருக்கு நாளாந்தம் 10 தொடக்கம் 12 கிராம் சீனி தேவைப்படுகிறது. எனினும் இந்த அளவு நாளாந்தம் 60 கிராமை தாண்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நீரிழிவு இருதய நோய்கள் உயர் இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நோய்களால் இலங்கையில் மாத்திரம் நாளாந்தம் 600 பேர் மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் நீரிழிவு நோயினால் வருடாந்தம் 100 பேர் தமது கால்களை இழக்கின்றனர். இந்த நிலையில் தொற்றாத நோய்கள் கொள்கை அடிப்படையில் சீனி மற்றும் உப்பு பாவனை தொடர்பில் புதிய சட்டதிட்டத்தை அமுலாக்கவும் இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. (அ-2)

# முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம், ஊதியம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

## அலன்ரின் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம், ஊதியம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

அச்செழு, நீர்வேலி குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதொன்றாகவுள்ளது. இதனை பெற்றோர்கள் நன்குணர்ந்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

குறித்த பிரதேசங்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடைமுறைப்படுத்தி வருகின்றார். அவ்வாறே நாமும் இப் பிரதேசங்களில் இருந்து கொண்டு பிரதேச நலனில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அச்செழு குடும்ப முன்பள்ளிகள் சார்பில் பத்து முன்பள்ளிகள் பங்குபற்றியதுடன் இவ் விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களை பாராளுமன்ற உறுப்பினர் அன்பளிப்பு செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)



சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தின் முப்பரிமாண நூலக கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நூலகர் அ.சிறிகாந்தலட்சுமி மங்கல விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.

*(படம் :- சாவகச்சேரி செய்தியாளர்)*

# மக்களின் வளமான எதிர்காலத்துக்காக தொடர்ந்தும் உழைப்பதற்கு தயார்

## கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா சந்தித்து கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட தலைமையகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி மக்களது பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்போது குறிப்பாக மீள்குடியேற்றம், மின்சாரம், வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

அங்கு கருத்துரையாற்றிய அமைச்சர், மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பதே தமது கட்சியின் நோக்கமெனவும் இதை முன்னிறுத்தியதாகவே தனதும் கட்சியினதும் செயற்பாடுகள் அமையப் பெற்றுள்ளதாகவும் இதற்காக ஒவ்வொருவரும் இரத்தம் சிந்துவதற்கு பதிலாக வியர்வை சிந்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மக்களின் வளமான எதிர்காலத்திற்காக தொடர்ந்தும் உழைப்பதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் இதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் பங்களிப்பும் அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# நாளை செயலமர்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் உளசமூக செயற்பாடுகளில் ஈடுபடும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக முதல் நிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் கருத்துரைகளை வடமாகாண உளசமூக வள நிலைய உதவி முகாமையாளர்களான செல்வி ப.உதயகலா, ச.ஆனந்த நடராஜன், வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இதில் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் உளசமூக செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைத்து ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ-3-266)

# இரண்டாம் உலக யுத்தம்


## ஒரு மீள்பார்வை 142



அர்டேன்னியில் ஜேர்மனியப் படையின் முன்னேற்றம்

**அர்டேன்னியில் பாசிச ஜேர்மனிய துருப்புகளின் எதிர்த்தாக்குதல்**

பரவலான தீர்மானகரமான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அனுகூலமான சூழ்நிலைகள் நிலவிய போதும் நேசநாட்டினர் மேற்கொண்டு தாக்குதல் தொடுப்பதை இழுத்தடித்தனர், தனிப்பட்ட நடவடிக்கைகளுடனும் முடிவற்ற படைமாற்றங்களுடனும் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டனர். இந்த யுத்தத்தில் சோவியத் யூனியனை அதிக பட்சம் பலவீனப் படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்குத்தனமான பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க கொள்கைதான் பிரிட்டிஷ்- அமெரிக்கப்படைத் தலைமை இப்படி நடந்து கொள்ளக் காரணமாகும். நிலவரத்தைக் கணக்கில் கொண்ட ஜேர்மனியப்படைத் தலைமை லியேஸ், அன்த்வேர்பனை நோக்கிய பொதுவான திசையில் அர்டேன்னியின் தாக்குதல் தொடுக்க முடிவுசெய்தது. பெரும் டாங்கிச் சக்திகளைப் பயன்படுத்தி பலத்த திடீர்'தாக்குதல் தொடுத்து பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகளை முறியடித்து, பாசிச ஜேர்மனிக்கு கௌரவமான தனி சமாதானத்திற்கு அமெரிக்காவையும் பிரிட்டனையும் தள்ளுவதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாயிருந்தது. பாசிச ஜேர்மனியின் எதிர்த்தாக்குதலைப் பற்றிய 1944- ஆம் ஆண்டு நவம்பர்




சோவியத்தின் *ரெட்ஸ்ரார்* விருதுபெற்ற அமெரிக்க லெப்ரினட் வில்லியம் எம்.பிளேயர்

10 OKWகட்டளையில் பின்வருமாறு கூறப் பட்டிருந்தது. அன்த்வேர்பன்- பிரஸ்ஸல்ஸ்- லுக்ஸம்பர்க் கோட்டிற்கு வடக்கே எதிரியின் சக்திகளை ஒழித்துக் கட்டுவதன் மூலம் மேற்கிலும் இதன் மூலம் சாத்தியமானால் மொத்தத்தில் யுத்தத்தில் தீர்மானகரமான திருப்புமுனையை அடைவதுதான் நடவடிக்கையின் நோக்கமாகும்.

அன்த்வேர்பன் பிரதேசத்தில் பிரிட்டிஷ் படைத் தொகுதி முழுவதையும் துண்டிக்கும் நோக்கத்தோடும் ஆஹெனில் இருந்து அமெரிக்கத் துருப்புகளை பிரான்சில் இயங்கிய நேசநாட்டுத் துருப்புகளிடமிருந்து துண்டிக்கும் நோக்கத்தோடும் அர்டேன்னி வழியாக லியேஸ், அன்வேர்பன் திசையில் பிரதான தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. பிரிட்டிஷ் துருப்புகளைக் கடலோரமாக நெருக்கி இரண்டாவது ட்யூன்கெர்கை ஏற்படுத்தும் எண்ணமிருந்தது. பிரதானத் தாக்குதலோடு கூட அர்டேன்னிக்கு வடக்கிலும் அல்சாஸிலும் இரண்டு துணைத் தாக்குதல்களைத் தொடுக்கவும் திட்டமிடப்பட்டது.

எதிர்த்தாக்குதல் தொடங்கவிருந்த சமயத்தில் ஹிட்லர் துருப்புகளின்

அர்டேன்னியில் ஜேர்மனியப்படையின் எதிர்த்தாக்குதல் நடவடிக்கை



வசம் 73 டிவிசன்களும் 3 பிரிகேடுகளும் இருந்தன. ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் இவை நேச நாட்டு டிவிசன்களைவிட பலவீன மானவையாக இருந்தன. பல ஜேர்மனிய டிவிசன்களின் முழுமையின்மை 30-40 சதவிகிதம் வரை இருந்தது. நேசநாட்டவரின் மதிப்பீட்டின்படி

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

பாசிச யூனிட்டுக்கள் அனைத்தையும் சேர்த்தால் அவை 39 பிரிட்டிஷ்- அமெரிக்க டிவிசன்களின் போர் வன்மைக்குச் சமமானவையாக இருந்தன.

எதிர் தாக்குதலுக்காக பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை 6வது எஸ்.எஸ். டாங்கிப்படை, 5-வது டாங்கிப்படை மற்றும் 7-வது படை அடங்கிய படைத் திரட்டை ஏற்படுத்தியது. ஒரு டிவிசன் சேம இருப்பில் இருந்தது. முக்கியப் படைத் திரட்டில் 21 டிவிசன்களும் சுமார் 900 டாங்கிகள், திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும் இருந்தன. 800 விமானங்கள் விண்ணிலிருந்து ஆதரவளித்தன. "அர்டேன்னியில் பயன்படுத்தப்பட்ட சக்திகள் ஏழையாகிப்போன மனிதனின் கடைசி சல்லிகளாகும்... எது எப்படியிருந்தாலும், போதுமான அளவு எரிபொருள் இல்லாத குறைந்தளவு ஆயுதத் தளவாடங்களைக்கொண்டிருந்த, விமான ஆதரவைப் பெறாத ஒருசில டிவிசன்களைக் கொண்டு அர்டேன்னிலிருந்து அன்த்வேர்ப்பன் வரை பிளந்து செல்லும் கடமையை முன்வைப்பது அனுமதிக்கத் தகாதது ஆகும்" என்று வேர்மஹ்றடின் தரைப்படைத் தலைமையகத்தின் முன்னாள் தலைவன் ஜெனரல் கால்டர் பின்னால் எழுதினான்.

1944 டிசெம்பர் நடுவில் பிரிட்டிஷ்- அமெரிக்கத் தரப்பில் 640 கி.மீ. நீளமுள்ள போர்முனையில் 63 டிவிஷன்கள் (15 கவச டாங்கி டிவிஷன்கள் உட்பட) இருந்தன. இவற்றில் 40, அமெரிக்க டிவிஷன்களாகும்; சுமார் 10 ஆயிரம் டாங்கிகள், தானியங்கிப் பீரங்கி அமைப்புகள், சுமார் எண்ணாயிரம் விமானங்கள் (போக்குவரத்து விமானங்களைச் சேர்க்காது) முதலியனவும் இருந்தன. ஐசன்ஹோவரிடம் 4 வான் இறக்குபடைகள் சேம இருப்பில் இருந்தன.

அர்டேன்னியில் நேசநாட்டவரின் தற்காப்பு பல வீனமானதாக இருந்தது. பாசிச ஜேர்மனியத்துருப்புகள் மிகவும் பலங்குன்றியுள்ளன, எனவே அவற்றால், எதிர்த்தாக்குதல் தொடுக்க முடியாது என்று கருதிய நேசநாட்டி



அர்டேன்னியில் அமெரிக்க காலட்படை எதிரிமீது தாக்குகிறது

னர், துருப்புகளைத் தற்காப்பிற்குத் தயார்ப்படுத்தவில்லை. "இவ்வளவு வியத்தகு முறையில் விரைவாக ஜேர்மனியர்களால் தம் சக்திகளைத் திரட்ட முடியுமென நான் நினைக்கவில்லை. எதிரியின் தாக்குதல் வாய்ப்புகளை நான் சரிவர மதிப்பிட வில்லை" என்று 12-வது படைத் தொகுதியின் முன்னாள் தளபதி ஜெனரல் பிரேட்லி எழுதினார்.

ஜேர்மனியர்கள் 1940 மாதிரியில் தாக்குதலைத்திரும்ப நடத்தமாட்டார்களென்ற கருத்து அமெரிக்கர்களிடம் மேலோங்கியிருந்தது. 115-வது கி.மீ. நீளமுள்ள பேர்முனையில் அர்டேன்னியில் தற்காப்பிலிருந்த 8-வது அமெரிக்க கோர்பஸ் பரவலான போர்முனையில் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த ஆதார நிலையங்களால் ஆன பிர தான தற்காப்பு மண்டலத்தை மட்டுமே ஏற்படுத்தியிருந்தது. இவற்றிற்கிடையே பீரங்கித் தொடர்பு இருக்கவில்லை. பொறியியல் ரீதியாக இவை போதுமான அளவு ஆயத்தமாயிருக்கவில்லை. எதிரியை வேவுபார்ப்பது சரிவர அமைக்கப்படவில்லை. அர்டென்னி திசையில் நேச நாட்டவருக்கு நேரடி நடை முறைச் சேம இருப்போ அல்லது போர்த்தந்திர சேம இருப்போ இருக்கவில்லை.

அர்டேன்னிக்கு வடக்கேயும் தெற்கேயும் அமெரிக்கர்களின் பெருமளவு சக்திகள் ஏராளமான கவச டாங்கி யூனிட்டுகளுடன் இயங்கின.



ஜேர்மனியர்களால் கைது செய்யப்பட்ட அமெரிக்கத் துருப்புகள்

(தொடரும்)

# வெளிநாடுகளில் உள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகளை மௌன விரதம் இருக்க பணிப்பு

## வெளிவிவகார அமைச்சு கடிதம் வரைந்தது

ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு எதிராக எந்த அறிக்கைகளையோ கருத்துகளையோ வெளியிடக்கூடாது என்றும் அறிவுறுத்தும் கடிதம் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தைக் கருத்தில் கொண்டே இக்கடிதம் அனுப்பப்படவுள்ளது.

ஐரோப்பாவில் உள்ள இலங்கையின் அனைத்து தூதரங்களுக்கும் குறிப்பாக ஜெனீவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி பணியகத்துக்கும் அனுப்புவதற்கான இந்தக் கடிதம் தற்போது இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வரையப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து அரசியல் செல்வாக்கில் பதவிகளைப் பெற்ற இலங்கை இராஜதந்திரிகள் பலரும் கடுமையான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

இதனால் சக்திவாய்ந்த நாடுகளுடனான உறவுகள் பாதிக்கப்பட்டு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக இலங்கை இப்போது உணர்கின்றது.

இதையடுத்தே வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை மௌனமாக இருக்கும் படி வெளிவிவகார அமைச்சு சுற்றிக்கை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

## கலாநிதிப்பட்டத்தை பெற்றுக்கொண்டார்



(சித்தங்கேணி) கலாநிதி காங்கேயநாதன் கண்ணன் லண்டனில் தூய கணிதத்தில் ஆய்வினை மேற்கொண்டு அண்மையில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடங்கி தூய கணிதத்தில் அதியுயர் புலமையை ஐக்கிய இராச்சியத்தில் பெற்றுள்ளார்.

இவர் தமது ஆரம்பக்கல்வியை யா/ திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் பின்னர் யா/வட்டு யாழ்ப்பாணக்கல்லூரியிலும் யா/ இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-17)

# மஹிந்தவின் லண்டன் விஜயத்தை எதிர்த்து கவனயீர்ப்புப்போராட்டம்

பிரித்தானிய அரச முடிசூட்டிய அறுபதாவது வருட நிறைவு விழாவே களங்கம் சூழப் போகிறது. அந்த விழாவுக்கு மஹிந்த ராஜபக்ஷ வருவதை அனுமதிக்க வேண்டாம்.

இலட்சக்காணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கும் தமிழர் பிரதேசங்களில் இன்றும் இராணுவ ஆட்சி நடக்கவும் காரணமாக இவர் இந்த விழாவில் கலந்து கொள்வது உலக மானிட பண்புகளுக்கும் மனித உரிமைகளுக்கும் பெருத்த அவமானம் ஆகும்.

அத்துடன் பாரம்பரியம்மிக்க பிரித்தானிய முடியாட்சிக்கும் இது மிகப்பெரும் களங்கத்தையும் வரலாற்று அவமானத்தையும் தந்துவிடும்.

மனித உரிமைகளையும் சர்வதேச சட்டங்களையும் காலில் போட்டு மிதித்த மஹிந்தவை பிரித்தானியாவிற்குள் அனுமதிக்க வேண்டாம் எனக்கோரி நடத்தப்பட்ட இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் பொலிஸார் அனுமதியளித்திருந்த எண்ணிக்கையை விட பல மடங்கு மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மோட்டார் வாகனங்களின் பாவனை அடுத்த 10 வருடங்களில் அதிகரிக்கும்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நாட்டில் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அடுத்த வருடங்களில் 78 இலட்சம் வரை அதிகரிக்கும் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் சில வருடங்களில் இலங்கையில் வாகன நெரிசல் அதிகரிக்கலாம் என மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து விநியோக முகாமைத்துவ கற்கைப்பிரிவின் பொறுப்பதிகாரி பேராசிரியர் அமல்குமாரகே தெரிவித்துள்ளார்.

தற்போது பயன்படுத்தப்படுகின்ற முப்பது இலட்சம் வாகனங்களுக்கு ஏற்ற வகையில் இலங்கையின் வீதிக்கட்டமைப்பு அமைக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டுகிறார்.

மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் வாகன நெரிசல் ஏற்படுவதை தடுப்பதற்காக புதிய போக்குவரத்து முறைமைகள் குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆயிரத்து 130 வாகனங்கள் வீதம் காணப்படுவதாகவும் இது அடுத்த 10 ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக பேராசிரியர் அமல் குமாரகே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே வாகன நெரிசலை எதிர்கொள்ளும் வகையில் வீதிகளை அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல குறிப்பிடுகிறார். (அ-2)

# ஆபிரிக்க நாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்கள் குறித்து அவதானம்

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் சந்தேகத்திற்கு இடமான வகையில் தங்கியுள்ள இலங்கைப் பிரஜைகள் குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக தகவல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவின் கானாவிலிருந்து கனடாவுக்குப் படகு ஒன்றின் மூலம் தப்பிச்செல்ல முற்பட்ட ஆறு இலங்கையர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமான முறையில் கனடா போன்ற நாடுகளில் பிரவேசிக்கும் நோக்கில் பல இலங்கையர்கள் ஆபிரிக்க நாடுகளில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு தங்கியிருப்போர் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கானாவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை சட்டவிரோதமான முறையில் கனடாவிற்கு அழைத்துச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட கோஷ்டியினர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர் என்ற போர்வையில் பல்வேறு கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்ட கோஷ்டியொன்றை ஹெம்மாதகம பொலிஸார் நேற்றைய தினம் முற்பகல் கைது செய்துள்ளனர்.

119 அவசர தொலைபேசி இலக்கத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தப்பிச் சென்றுகொண்டிருந்த நான்கு சந்தேக நபர்களை கைது செய்ய முடிந்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வந்துள்ள பொலிஸ் குழு எனக்கூறி இந்த சந்தேக நபர்கள் கேகாலை பகுதியிலுள்ள விடுமுறை விடுதியொன்றை சோதனையிட வேண்டியுள்ளதாக தெரிவித்து அங்கிருந்த பணத்தை கொள்ளையிட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார். (அ-2)

# நட்பு ரீதியான வன்பந்து கிரிக்கெட்டில் கிளிநொச்சி மகா வித்தி அணிக்கு வெற்றி



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வன்பந்து கிரிக்கெட் அணி ஆரம்பிக்கப்பட்டு 9 ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் முகமாக கிளி/மகா வித்தியாலய அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான நட்பு ரீதியான போட்டி கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 10.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பதிலுக்கு 49 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிளி ம.வி. அணி 8 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி பெற்றது. இதில் தனுஜன் 29 ஓட்டங்களையும் விதுஷன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி/மகா வித்தியாலய அணி 15 பந்துப் பரிமாற்ற நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அணித் தலைவர் சி. விதுல்ஜன் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றார். பேபிசன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக துவாரகன் 3 விக்கெட்டுக்களையும் பிரதீபன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்கு 105 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 84 ஆட்டங்களை மாத்திரமே பெற்றது.

கொலின்ஸ் 25 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் ரஜீவன் 4 விக்கெட்டுக்களையும் விதுஷன், பிரகாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இவ்விரு சுற்றுப்போட்டிகளிலும் கிளி/மகா வித்தியாலய அணியே வெற்றி பெற்றது. (அ-7)

# அமைச்சரவை மாற்றங்களும் நியமனங்களும் விரைவில்!

(கொழும்பு)

இலங்கையின் அமைச்சரவையில் மாற்றங்களும் புதிய பிரதி அமைச்சர்கள் நியமனங்களும் எதிர்வரும் ஜுன் மாதம் 12 ஆம் திகதி இடம்பெறுமென நம்பகமாகத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜுன் 4 ஆம் திகதி பிரிட்டன் மகாராணி இரண்டாவது எலிசபெத் முடிசூடி 60 ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு நடைபெறவுள்ள விழாவில் கலந்து கொள்ளச் செல்கின்றார். அவர் நாடு திரும்பியவுடன் அமைச்சரவை மாற்றம், பிரதி அமைச்சர்கள் நியமனம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி அமைச்சர்களான கட்சித் தலைவர்கள் இரண்டு தடவை மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தவர்கள் மற்றும் மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களாகியோர் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகின்றது.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் பீ.திகாம்பரம், பிரபா கணேசன் ஆகியோர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பிரித்தானிய தூதுவரின் கருத்துக்கு வெளிவிவகார அமைச்சு கண்டனம்

வடபகுதியில் நிலை கொண்டுள்ள படைத்தரப்பினரின் எண்ணிக்கை தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் தெரிவித்த கருத்துக் குறித்து அவர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருவதாக தெரிய வருகின்றது.

வடபகுதியில் பாரியளவில் குவிக்கப்பட்டுள்ள இலங்கை படைத்தரப்பினரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய தேவை உள்ளதாக பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்திருந்தார்.

இவரின் இக்கருத்து பிரித்தானியத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ...ணொளி கேள்வி பதில் நிகழ்ச்...யில் கூறப்பட்டுள்ளது.

இவரின் கருத்து அரசாங்கத்துக்கு சீற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே ஜோன் ரன்கின் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சால் ஆராயப்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

ஜோன் ரன்கினின் கருத்துத் தொடர்பில் உன்னிப்பாக ஆராய்ந்து வரும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அவர் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து தீர்மானிக்கவுள்ளதாக அறியமுடிகின்றது.

இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்றே வடக்குக் கிழக்கிலும் இலங்கை படைத்தரப்பினர் நிலை கொண்டிருக்க வேண்டும் என இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அரசியல் தஞ்சம் கோரி நாட்டிற்குள் பிரவேசித்தோர் கைது செய்யப்படுவர்

## குடியகல்வு குடிவரவு திணைக்களம் அறிவிப்பு

அரசியல் தஞ்சம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்த வெளிநாட்டு பிரஜைகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவி க்கப்படுகின்றது.

இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான் மாலைதீவு போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நபர்கள் நீண்ட காலமாக நாட்டில் தங்கியிருப்பதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த வெளிநாட்டு பிரஜைகளை கைது செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# களனி தங்கத்துகள் ஆய்வுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க தீர்மானம்

களனி கங்கையின் பூகொடை பகுதியில் தங்க துகள் ஆய்வு நடவடிக்கைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை முதல் அனுமதிப்பத்திரம் வழங்க புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் தீர்மானித்துள்ளது.

அந்த பகுதியில் தங்க துகள் அகழ்வில் ஈடுபட்டிருந்த கிராம மக்களை சந்தித்து நேற்றைய தினம் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்படிவங்களை விநியோகித்ததாக பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பீ.விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் மூன்று மாத காலத்திற்கு இரண்டாயிரம் ரூபா கட்டண அடிப்படையில் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தங்க துகள் அகழ்விற்கு இயந்திரங்களை உபயோகிக்க முடியாது என்பதுடன் மனிதவளத்தை மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்றும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 2012.05 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1503-ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது. இது 10 ஆண்டுகளில் முறிந்தது.

★ 1588-30ஆயிரம் பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா எனப்படும் 130 ஸ்பானியக் கப்பல்கள் பிரித்தானியக் கடற்படையினருடன் மோதும் பொருட்டு ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தன.

★ 1737-வீனஸ்கோள் மேர்க்குரி கோளின் முன்னால் கடந்ததை ஜோன் பேவிஸ் என்ற வானியியலாளர் அவதானித்தார்.

★ 1905-ரஷ்ய- ஜப்பானியப் போர்: சூஷிமா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ரஷ்யக் கடற்படையின் பால்ட்டிக் பிரிவு ஜப்பானியர்களால் அழிக்கப்பட்டது.

★ 1915-சிங்கள- முஸ்லிம் கலவரம்: இலங்கையின் கண்டியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5 இல் முடிவுக்கு வந்தது.

★ 1937-கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலத்தை பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அதிகாரபூர்வமாக திறந்து வைத்தார்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம் ஜேர்மனியிடம் சரணடைந்தது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: நாசிகள் தமது சகாவான ரைன்ஹார்ட் ஹைட்ரிக் படுகொலை செய்யப்பட்டமைக்குப் பதிலடியாக செக்கோசிலவாக்கியாவில் ஆயிரத்து 800 பேரைப் படுகொலை செய்தனர்.

★ 1958-இலங்கை இனக்கலவரம் இலங்கையின் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

★ 1964-பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

★ 1974-வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சன்னிங்டேல் உடன்பாடு முறிந்தது.

★ 1987-மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த 19 வயது மத்தாயஸ் றஸ்ட் சிறிய ரக விமானம் ஒன்றில் மொஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் தரையிறங்கினார். உடனடியாகக் கைது செய்யப்பட்ட இவர் 1988 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 இல் விடுவிக்கப்பட்டார்.

★ 1991-எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவை எதியோப்பிய மக்கள் புரட்சி ஜனநாயக முன்னணியினர் கைப்பற்றினர். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1995-ரஷ்யாவின் நெஃப்டி கோர்ஸ்க் நகரில் இடம்பெற்ற 7.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1998-பாகிஸ்தான் ஐந்து அணுவாயுதச் சோதனைகளை நிகழ்த்தியது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில நாடுகள் பாகிஸ்தானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

### பிறப்பு

★ 1980-ம.சிவசுப்பிரமணியன்,தமிழ் எழுத்தாளர்.

### இறப்புக்கள்

★ 1884-சாமுவேல் ஃபிஸ்க்கிறீன், தமிழ் மருத்துவ முன்னோடி, அமெரிக்கக் கிறிஸ்தவ ஊழியர் (பி.1822)

★ 1972-எட்டாம் எட்வேர்ட், ஐக்கிய இராச்சியத்தின் முடி துறந்த மன்னர் (பி. 1894)

### • சிறப்பு நாட்கள்

★ அசர்பைஜான், ஆர்மீனியா நாடுகளின் குடியரசு தினம்

★ பில்ப்பைன்ஸ்- தேசிய கொடி தினம்



★ 1923-இந்திய அரசியல்வாதியும் நடிகருமாகிய, என்.டி.ராமராவின் பிறந்த தினம் (இ.1998)

# பொலன்னறுவை சிவன், விஷ்ணு ஆலயங்களில் 30 புராதன தமிழ் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

பொலன்னறவையில் அமைந்திருக்கும் சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் இதுவரை வாசிக்கப்படாத 30 இற்கும் மேற்பட்ட தமிழ் சாசனங்கள் (கல்வெட்டுகள்) அடையாளம் காணப்பட்டுள்ளன.


பேராசிரியர் சி. பத்மநாதன்

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை, தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் அண்மையில் பொலன்நறுவைக்கு விஜயம் மேற்கொண்டபோது இவற்றை கண்டுபிடித்துள்ளார்.

இலங்கையில் சோழர்கால ஆட்சிப் பகுதியிலும் அதற்குப்பின்னரான காலப்பகுதியிலும் 7 சிவாலயங்களும் 5 விஷ்ணு ஆலயங்களும் ஓர் அம்மன் ஆலயமும் காணப்பட்டதாகவும் அவற்றில் மூன்றின் சிதைவுகளை தற்போது கண்டறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாலயங்களின் கிடைக்கப்பெற்ற சாசனங்கள் குறித்து விளக்குவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில்கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் பத்மநாதன் மேலும் விபரிக்கையில்:-

பொலன்னறுவை நகரம் இலங்கையில் காணப்பட்ட இராசதானிகளிலே மிகவும் பிரசித்தமானது. அநுராதபுரம், 10 நூற்றாண்டுகளுக்கு மேலாக இராசதானியாக விளங்கினாலும் பொலன்னறுவையினுடைய சின்னங்கள் மிகப் பரந்த நிலப்பரப்பிலே அங்குமிங்குமாக அமைந்து காணப்படுகின்றன. அநுராதபுரத்தை ஒரு "சங்கத்தார் நகரம்" என கூறலாம். ஏனெனில் அங்கு அரண்மனை, கோட்டை, கொத்தளங்கள் என்பவற்றைக் காட்டிலும் சங்கத்

**க. கோகிலவாணி**

தாரரின் விகாரங்கள், சேதியங்கள் என்பவற்றின் அழிபாடுகளே எங்கும் செறிந்து காணப்படுகின்றன.

ஆனால், பொலன்னறுவை ஏறக்குறைய 250 வருடங்கள் இராசதானியாக அமைந்திருந்த போதிலும் அங்கு உலகியல் சார்ந்த பிரம்மாண்டமான அமைப்புகளும் சமய நெறிகளைச் சார்ந்த கட்டுமானங்களும் காணப்படுகின்றன. அங்கே 7ஆம் நூற்றாண்டு முதலாக அநுராதபுர மன்னர்கள் படைகளை அமைத்திருந்தனர். அதனாலே இது கந்தவுரநுவர என்ற பெயரை பெற்றது. சிங்கள மொழியில் அவ்வாறே அழைக்கின்றனர். காலப்போக்கில் அநுராதபுர மன்னர்கள் இதனை ஓர் இரண்டாம் தலைநகரமாக பயன்படுத்தினார்கள். அங்கு சிலகாலம் தங்கியிருந்த அரசர்களின் பெயர்கள் மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தோடு சில சங்கத்தார் பள்ளிகள், மருத்துவ மனைகள் முதலியனவும் அமைந்திருந்ததாக கூறப்படுகின்றது.

10 ஆம் நூற்றாண்டின் காலப் பகுதியில் அநுராதபுரத்தில் ஏற்பட்ட படைக்கலகத்தின் விளைவாக அரசன் அந்த இராசதானியைவிட்டு தென்னிலங்கைக்கு ஓடிவிட்டான். இக்காலத்தில் தென்னிந்தியாவில் சோழர்கள் மீண்டும் பேரெழுச்சி பெற்றனர். முதலாம் இராஜ இராஜன் இலங்கையில் உள்ள வணிகன் ஒருவன் மூலமாக இலங்கையின் அரசியல் நிலைகளை அறிந்து அதனைக் கைப்பற்றுவதற்காக படையொன்றை இலங்கைக்கு அனுப்பினான். அந்தப்படை எதிர்ப்பின்றி அநுராதபுர இராஜ்ஜியத்தில் வடக்கு, வடமத்தி, வடகிழக்கு ஆகிய பகுதிகளை கைப்பற்றிவிட்டது. அதன் பின் 1017 ஆம் ஆண்டளவில் இராஜேந்திரனுடைய காலத்தில் மீண்டும் சோழர் படையெடுத்து வந்தனர்.



இந்த படையெடுப்பிற்கு ஜயங்கொண்ட சோழர் மூவேந்த வேளான் என்ற சேனாதிபதி தலைமைதாங்கி சென்றான். அவன் தென்னிலங்கைக்கு சென்று 5ஆம் மஹிந்தன் எனும் அரசனையும் அவனது தேவியையும் அவர்களது முடி முதலான அரச சின்னங்களையும், அவற்றோடு பல தசாப்தங்களுக்கு முன்பு பாண்டிய அரசன் அநுராத புரத்திலே விட்டுச்சென்ற முடி, இந்திரனாராம், பட்டமாலை போன்ற அரச சின்னங்களையும் கைப்பற்றிக் கொண்டு சென்று சோழ மன்னனிடம் ஒப்படைத்தான். இதுகுறித்த விபரங்கள் மஹாவம்சத்தில், இராஜேந்திர சோழனின் மெக்கித்தியில் கூறப்படுகின்றன. ஜயங்கொண்ட சோழர் மூவேந்த வேளான் மாதோட்டத்தில் எழுதிவைத்த சாசனத்தில் இருந்தும் இவைபற்றி குறிப்பிடப்படுகின்றன.

அக்காலம் முதலாக பொலன்னறுவை சோழர்களின் பிரதான நிர்வாக நிலையமாக, மத்திய நிலையமாகிய படைத்தளமாக விளங்கியது. அங்கிருந்துதான் சோழப்படைகள் தென்னிலங்கை மீது படையெடுத்து சென்றன. சோழர்களோடு பொலன்னறுவையினுடைய வரலாற்றின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியது. முன்னைய அரச காலத்தில் இரண்டாவது தலைநகராக விளங்கிய பொலன்னறுவை தற்போது பிரதான நிர்வாக நிலையமாக வளர்ச்சி பெற்று நிற்கின்றது.


அதுமட்டுமின்றி சோழர் ஆதிக்கம் இலங்கையில் ஏற்படுவதற்கு ஐந்நூற்றுவர் என்ற வணிக கணத்தவரும் அவருடைய படைகளும் ஏதுவாக இருந்தன. பொலன்னறுவை, பதவியா போன்ற பகுதிகளை சோழர் படைக்கு துணைப்படையாக சென்று வணிகரின் படைகளே கைப்பற்றின என கருத முடிகின்றது.

சோழர் ஆட்சி 993 முதல் 1070 ஆம் ஆண்டுவரை நிலைபெற்றன. இக் காலப்பகுதியில் இவர்கள் பாதுகாப்பு அரண்களை அமைத்திருந்தோடு இருப்பிடங்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். ஆயினும் பொலன்றுவையில் உள்ள சோழர் காலத்து ஆலயங்கள் பெரும்பாலும் வணிகர்களால் நிர்மாணிக்கப்பட்டவை என்று கொள்வதற்கு சாண்றுகள் உண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை பாடல்பெற்ற இரண்டு தலங்களை அமைப்பதில் மட்டுமே சோழர்கள் அக்கறை கொண்டிருந்தர்கள். அவற்றின் நிர்மாணத்தில் பங்கு கொண்டிருந்தாங்ள். மற்ற இடங்களில் அவர்களது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள் அனைத்தும் அவர்களுடைய அதிகாரிகளினாலும் வணிகர்களினாலும் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பதவியாவில் அமைந்த இரவிகுல மாணிக்க ஈஷ்வரம், மதிரிகிரியான பண்டித சோழ ஈஸ்வரம், புதுமுத்தால பகுதியில் அமைக்கப்பட்ட விக்கிரம சடாமேக புரம் முதலானவை வணிகரின் திருப்பணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. பொலன்னறுவையில் எல்லாமாக 14 இந்து ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றிலே 7 சிவன் ஆலயங்கள், 5 வைணவ ஆலயங்கள், ஓர் அம்மன் ஆலயம் என்றும் 100 வருடங்களுக்கு முன்பே அடையாளம் காணப்பட்டுள்ளன. இறுதியான 14 ஆவது ஆலயத்தின் அடையாளமானது சரியாகத் தெரியவில்லை. இதில் கோணேஸ்வரரின் படிமம் காணப்பட்டதால் இது விநாயகர் ஆலயம் என்று சிலர் கருதினார்கள். இது உறுதிப்படுத்தப்படாத தகவல்.

இந்த 14 ஆலயங்களில் சில சோழர் ஆட்சிக்காலத்திலும் ஏனையவை சோழர் ஆட்சிக்காலம் முடிந்த பின்னும் கட்டப்பெற்றவை. அவற்றில் பிரதானமான முதலாம் சிவாலயம், பொலன்னறுவையில் உள்ள நாற்சதுர மேடையின் சமீபமாக அமைந்திருக்கிறது. இதை நூற்றாண்டுகளுக்கு முன் அகழ்வு செய்த போது சிவபெருமான், நடராசர், சமயகுரவர், அம்மன் முதலானோரின் உண்மையான வனப்புள்ள படிமங்கள் காணப்பட்டுள்ளன. ஆலயத்தினுடைய மூலஸ்தானமும் அதன் முன்பு அமைந்த அந்தராடமும் நிலைபெறுகின்றது.

இதனது விமானம் இடிந்து விழுந்து அடையாளம் காமுடியாத வகையில் அழிந்துவிட்டது. அகழ்வாய்வு செய்தபோது இதுவே நிலையாகும். இவ்வாலயத்தின் மண்டபங்களினுடைய அடித்தளங்கள் காணப்படுகின்றன. மேற்பாகம் அழிந்துவிட்டது. இங்கே சாசனங்கள் இருப்பதாக தெரியவில்லை.



12 ஆம் நூற்றாண்டில் அரசராக விளங்கிய விக்கிரம பாகு, இரண்டாம் கஜபாகு போன்றோரின் வழிபாட்டுக்குரிய கோயிலாக இது அமைந்தது. அவர்கள் இருவரும் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

(தொடரும்)

# வெளிநாட்டு மொழிகளை கற்றால் வேலைவாய்ப்புகள் ஏராளம்!

மனிதர்கள் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காகத் தோன்றியதே மொழியாகும். காலப் போக்கில் பல மாற்றங்களை சந்தித்து இன்று உலகம் முழுவதும் பல்வேறு மொழிகளாக விரிவடைந்துள்ளது.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

வெளிநாட்டு மொழிகளான ஜேர்மன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், சைனீஸ், கொரியன், ஜப்பானீஸ் போன்றவற்றை கற்பதன்மூலம் நல்ல வருமானத்துடன் கூடிய வேலை வாய்ப்பைப் பெற முடியும்.

பிறநாட்டினர் பேசுவதை தாய் மொழி அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உரையாற்றுவது பிறநாட்டு மொழிகளை கற்பித்தல் என இந்த துறைக்கான வேலைவாய்ப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. தற்போது ஏராளமான பன்னாட்டு நிறுவனங்கள் கால்பதித்துள்ள நிலையில் வெளிநாட்டு மொழிகளை கற்றுக் கொள்வதற்கான ஆர்வமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக் கொள்வதன் மூலம் என்னென்ன வேலைவாய்ப்புகளைப் பெற முடியும் என்பதை இனி பார்க்கலாம்...




ஒரு வெளிநாட்டு மொழியில் சிறப்பான தேர்ச்சி பெற்றவர், அதனை பயிற்றுவிப்பராகவோ, தொழில் நுட்ப ரீதியில் மொழி பெயர்ப்பவராகவோ, மொழி பெயர்த்து உரையாற்றுபவராகவோ, பிற நாட்டு தூதர்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு உதவியாளராகவோ பணியாற்ற முடியும். இதுமட்டுமின்றி பல்வேறு புத்தக பதிப்பகங்கள் தங்களுக்கு தேவையான வெளிநாட்டு நூல்களை மொழிபெயர்த்துத்தர உள்நாட்டு மொழிபெயர்ப்பாளர்களையே நாடுகின்றன.

வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள், அமைப்புகளிலும், மொழி அறிந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

பதிப்பகத்துறை, ஊடகங்கள், வங்கிகள், மார்க்கெட்டிங், பப்ளிக் ரிலேஷன் போன்ற துறைகளிலும் பிற மொழி அறிந்தவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் காத்திருக்கின்றன. சர்வதேச அமைப்புகளான UNO, UNICEFF, Indian National Scientific Documentation centre, International Trade Organization போன்றவற்றில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.

இதுமட்டுமன்றி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றவும் வாய்ப்புகள் கிடைக்கும். வெளிநாட்டுத் தூதரகங்கள், பன்னாட்டு விமான நிறுவனங்கள், ஹோட்டல் துறை, ஏற்றுமதி நிறுவனங்கள் ஆகியவற்றிலும் பிறநாட்டு மொழிகளைக் கற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளன.

வெளிநாட்டு மொழிகளை கற்பிக்கும் ஏராளமான கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் பட்டப்படிப்பு மற்றும் சான்றிதழ் என இந்தக் கல்வி கற்பிக்கப்படுகிறது. பல்வேறு மொழிகளை கற்பிக்கும் ஏராளமான கல்லூரிகள் இருக்கின்றன.




# வெளிநாடுகளில் பொறியியற்கல்வியும் அதனை கற்பதற்கான தகுதிகளும்

ஒரு மாணவர் வெளிநாட்டிற்கு சென்று பொறியியல் படிப்பை மேற்கொள்ள நினைப்பதற்கு பலவித காரணங்கள் உள்ளன. பொதுவாக முன்னேறிய மேற்கத்தேய நாடுகள் குறிப்பிட்ட துறையில் ஏற்பட்டிருக்கும் புதிய கண்டுபிடிப்புக்களை கல்வியில் அறிமுகப்படுத்துவதுடன் விரிவான ஆராய்ச்சி வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. சமீபகாலமாக ஆசிய நாடுகளான ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அனுபவரீதியிலான கல்வி, சர்வதேச அணுகுமுறை மற்றும் சிறப்பான வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றால் பொறியியல் படிப்புக்களுக்கு இந்த நாடுகளும் பெயர்பெற்று விளங்குகின்றன். சர்வதேச கல்வியின் முக்கியத்துவத்தை உலகளாவிய நிறுவனங்கள் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளன.



கணக்கிலடங்காத வெளிநாட்டுப் பல்கலைக்கழகழங்கள் இருப்பதால் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், கனடா, நியூ சிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் போன்ற பல நாடுகளில் எங்கே செல்வது என்ற குழப்பம் ஏற்படும். பல சர்வதேச கல்வி நிறுவனங்கள், கல்வி தொடர்பான உலகளாவிய ஒத்துழைப்புக்களையும் வைத்துள்ளன. நீண்டகால திட்டங்கள், வேலை வாய்ப்புக்கள், கற்பித்தல் மொழிகள், அணுகல் வசதிகள், செலவீனங்கள் போன்ற பல விடயங்களை கவனத்தில் கொண்டே ஒரு மாணவர் வெளிநாட்டுக் கல்வி தொடர்பான முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

### சேர்க்கை நடைமுறைகள்

ஒவ்வொரு வெளிநாட்டுப் பல்கலையும் தனக்கென தனித்தனி அனுமதி விதிமுறைகளைக் கொண்டிருந்தாலும் சில விதிமுறைகள் அனைத்திற்கும் பொதுவானவையாக உள்ளன. அந்தப் பொதுவான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

❖ இளநிலைப் படிப்பில் சேர்வதற்கு நீங்கள் எந்த நாட்டு பல்கலைக்கு விண்ணப்பம் செய்கிறீர்களோ, அந்நாட்டில் அங்கீகரிக்கத்தக்க பாடசாலை மேற்படிப்பை முடித்திருக்க வேண்டும். உங்களின் பாடசாலை படிப்பு ஆவணங்களைப் பொறுத்தவரை மதிப்பெண்களுடன் இதர திறன் சான்றுகளும் இருந்தால் அதற்கு கூடுதல் முக்கியத்துவம் கிடைக்கும்.

❖ அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு செல்லும் போது ஆங்கிலத்திறமை என்பது மிகவும் முக்கியம். எனவே TOEFL மற்றும் IELTS போன்ற பரீட்சைகளை எழுதி தேவையான மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும்.

❖ பொறியியல் படிக்க வேண்டுமெனில் பாடசாலை படிப்பில் கணிதம் இருக்க வேண்டியது கட்டாயம் என்பது நம் அனைவருக்கும் தெரிந்தது தான். ஆனால், சில பல்கலைக்கழகங்கள் இந்த கணிதத்துடன் இயற்பியல் மற்றும் வேதியியல் போன்ற பாடங்களும் கட்டாயம் என்கின்றன.


❖ பெரும்பாலான வெளிநாட்டுப் பல்கலைகள் SAT1 மற்றும் SAT2 பரீட்சையில் மாணவர்கள் தேறியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. குறிப்பாக அமெரிக்க கல்வி நிறுவனங்கள் இத்தகைய பரீட்சைகளை மாணவர்கள் எழுதுவதை ஒரு பொதுத் தகுதியாகவே பார்க்கின்றன.

❖ எந்த வெளிநாட்டு பல்கலைக் கழகமும் மாணவரின் மதிப்பெண் பட்டியலோடு அவரின் தனித்திறன் சான்றிதழ்களையும் (Certificate of extra curricular activities) முக்கியமாகக் கருதுகின்றன. எனவே, வெளிநாட்டில் படிக்க வேண்டும் என்று கனவு காணும் மாணவர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

❖ சில நாடுகளில் இளநிலை பட்டப்படிப்பில் சேர குறைந்தபட்ச வயது 18 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### சேர்க்கைக்கு தயாராதல்

நீங்கள் இளநிலைப் பொறியியல் படிப்பை் ஏதேனும் ஒரு வெளிநாட்டுப் பல்கலையில் மேற்கொள்ள விரும்பினால் அதற்கான தெரிவு செய்தல் செயற்பாட்டை பத்தாம் வகுப்பு' படிக்கும் போதே தொடங்கி




விட வேண்டும். 12 ஆம் வகுப்பு இறுதித் பரீட்சை முடிபுகள் வெளியாகும் முன்பே நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். எனவே, இந்த நிலையில் நீங்கள் 11 ஆம் வகுப்பில் எடுத்த மதிப்பெண்கள் அதிக முக்கியத்துவம் பெறும். எனவே, 11 ஆம் வகுப்பு பரீட்சையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதன் மதிப் பெண்கள் தான் இதுபோன்ற சூழல்களில் உங்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றன. (தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

114

# பளிங்கு மாளிகை



மேற்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்திருந்த அழகான சிறிய இராச்சியமான சோம்நாத்பூரை, சோமதேவர் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அருகிலுள்ள பல இராச்சிய மன்னர்களிடம் நேசக்கரம் நீட்டி அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டதால் அவருக்குப் பகைவர்களே இல்லை. இராச்சியத்தில் அமைதி நிலவியது.

மன்னருக்கு ஒரேயொரு மகன் இருந்தான். அவன் பெயர் சோமராஜ். பட்டத்து இளவரசனான சோமராஜ், பல நாடுகளையும் சுற்றிப் பார்க்க ஆவல் கொண்டான். ஒருநாள் அவன் மன்னரிடம் சென்று அப்பா எனக்கு பல நாடுகளையும் சுற்றிப் பார்க்க ஆவலாயிருக்கிறது. நான் தனியாகச் சென்று வர அனுமதி அளியுங்கள்! என்றான்.


அது கேட்டுத் தயங்கிய மன்னர், ஏன் தனியாக செல்ல வேண்டும், மகனே! உன்னுடன் ஒரு பட்டாளத்தையே அனுப்புகிறேன்! என்றார். வேண்டாம் அப்பா! என்று சோமராஜ் மறுத்து விட்டான்.

சரி! சென்றுவா! செல்லுமுன் உன் தாயாரிடமும் அனுமதி வாங்கிக் கொள்! என்றார். தன் தாயிடம் சென்ற சோமராஜ் அவளிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்

## அம்புலி மாமா கதைகள்

தான். மகனே! உன்னைத் தனியாக அனுப்ப எனக்கு விருப்பம் இல்லை. வேண்டாத விடயங்களில் தலையிட்டு ஆபத்தைத் தேடிக் கொள்ளாமல் பத்திரமாகத் திரும்புவேன் என்று நீ வாக்குறுதி அளித்தால் தான் உன்னைச் செல்ல அனுமதிப்பேன்! அவ்வாறே வாக்குறுதியும் அளித்தான்.

மறுநாள் சோமராஜ் தன் பெற்றோரிடம்



விடைபெற்றுக் கொண்டு தலைநகரத்தை விட்டுப் புறப்பட்டான். தனது இராச்சியத்தைத் தாண்டியபின்பு, தன்னுடன் வந்த வீரர்களைத் திருப்பியனுப்பி விட்டு சோமராஜ் தன் குதிரையில் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

சங்கிலி போல் தொடர்ந்து வந்த மலைத் தொடர்களையும், அவற்றின் இடையே உருவாகி ஓடிப்பாய்ந்த நீர்வீழ்ச்சிகளையும், நீரோடைகளையும் பார்த்து ரசித்தவாறே பல நாட்கள் பயணம் செய்தான்.

ஒருநாள் அவன் செல்லும் வழியில் ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. ஆற்றில் நீரோட்டம் இல்லாததால், அதை சோமராஜ் எளிதில் கடந்து அக்கரையை அடைந்தான். அங்கு அடர்ந்து வளர்ந்து இருந்த மரங்களின் இடையே சென்ற சோமராஜின் கண்களில் ஒரு பளி ங்கு மாளிகை தென்பட்டது.

அடர்ந்த காட்டி னுள் ஒரு மாளிகையைக் கண்டு வியந்த அவன், உடனே அந்த மாளிகையை நெருங்கினான். ஆளரவமேயின்றி அந்த இடம் மிக அமைதியாக இருந்தது. மாளிகை வாயி லிலிருந்த ஒரு பெரிய முரசைத் தட்டி ஒலி யெழுப்பியும், யாரும் வரவில்லை. இத்தனை அழகான மாளிகையில் யாருமே இல்லையா என்று யோசித்துக் கொண்டே அவன் உள்ளே நுழைந்தான்.

நுழைந்ததும் அங்கு பல காவல் வீரர்கள் நின்றிருக்கக் கண்டான். ஆனால் என்ன அதிசயம்? அவர்கள் அனைவரும் பதுமைகள் போல் நின்றிருந்தனர். அவர்கள் உயிரற்ற சிலைகளாக நின்றுகொண்டிருந்தனர். மேலும் உள்ளே சென்ற சோமராஜ் ஓர் ஆயுதக் கிடங்கினைக் கண்டான்.

கத்தி, வாள்கள், வேல்கள், ஈட்டிகள் ஆகியவை அங்கே நிறை நந்திருந்தன. அங்கிருந்த காவல் வீரர்களும் உயிரற்ற சிலைகளாகக் காணப்பட்டனர். அங்கிருந்து சென்ற சோமராஜ் தர்பாரில் நுழைந்தான். அங்கு சிம்மாசனத்தில் ராஜாவும், ராணியும் அருகருகே உயிரற்ற சிலை களாக அமர்ந்திருந்தனர்.

பின்னர் அந்தப்புரம் சென்ற சோமராஜ், அங்கே மஞ்சத்தில் மிக அழகிய இளவரசி ஒருத்தி ஒய்யாரமாகச் சாய்ந்து அமர்ந்திருக்கக் கண்டான்.

உயிரற்ற அவள் அருகில் இரு மந்திரக் கோல்களும், ஒரு பெரிய கிண்ணத்தில் நீரும் இருந்தன. மந்திரக் கோல்களில் ஒன்று தங்கத்தினாலானது, மற்றொன்று வெள்ளியில் செய்தது. ஏதோ ஓர் உள்ளுணர்வால் தூண்டப்பட்ட அவன் கிண்ணத்திலிருந்த நீரை எடுத்து அவள் முகத்தில் தெளித்து விட்டு, அவளைத் தங்க மந்திரக் கோலால் தொட்டான். என்ன அதிசயம்? இளவரசி உடனே உயிர் பெற்று எழுந்து விட்டாள். சோமராஜைக் கண்டதும் அவள் விழிகள் வியப்பினால் விரிந்தன.

யார் நீ? என்று அவள் கேட்க சோமராஜ், நான் சோமநாத்பூர் இளவரசன் சோமராஜ்! இங்கு எல்லோரும் உயிரற்ற சிலைகளாக இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்த நான், உன் மீது தண்ணீர் தெளித்து மந்திரக் கோலால் தொட்டதும் நீ உடனே உயிர் பெற்றாய். அதிருக்கட்டும் இங்கு நீங்கள் அனைவரும் சிலைகள் போல் தோற்றமளிக்கக் காரணம் என்ன? என்று கேட்டான்.

அது ஒரு பெரிய கதை! என்று நீண்ட பெருமூச்சு விட்ட அவள் அந்த மர்மத்தை விளக்கினாள். நான் இளவரசி இரத்தின குமாரி! என் தந்தை ரத்னகிரி இராச்சியத்து மன்னர். என் தந்தை இந்த இடத்தில் தன் இராச்சியத்தை நிறுவிய போது, திடீரென்று ஒரு பூதம் எங்கிருந்தோ தோன்றி, இந்த நிலம் தனக்குச் சொந்தமானது என்று சாதித்துத் தகராறு செய்தது.

அதன் சொல்லை ஏற்க மறுத்த என் தந்தை பூதத்துடன் சண்டையிட முயன்றார். எங்கள் படைகள் முழுவதையும் போரில் ஈடுபடுத்தியும், பூதம் தனியாக நின்று எங்களுக்குப் பெருத்த சேதத்தை விளைவித்தது.

அதனால் என் தந்தை பூதத்துடன் சமா



தான உடன்படிக்கை செய்ய விளைந்தார் என்று கூறி நிறுத்தினாள்.

அப்புறம் என்று சோமராஜ் ஆவலுடன் கேட்க அவள் தொடர்ந்து சமாதானத்திற்கு பூதம் ஒரு நிபந்தனை போட்டது. அதாவது நான் பூதத்தை திருமணம் செய்து கொள்ள இசைந்தால் இந்த இடத்தை விட்டுக் கொடுத்து விடுவதாக பூதம் கூறியது. அதற்கு என் தந்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆகையால் கோபம் கொண்ட பூதம் எங்கள் எல்லோரையும் வெள்ளி மந்திரக் கோலால் தொட்டு சிலைகளாக மாற்றி விட்டது.

என்னிடம் வந்து உன்னையும் சிலையாக மாற் றத் தான் போகிறேன். ஆனால் ஒருநாள் ஒரு தைரியமான இராஜகுமாரன் இங்கு வந்து தங்க மந்திரக் கோலால் தொட்டு உங்களை உயிர் எழுப்புவான். வெள்ளியை மட்டுமன்றி அந்த தங்க மந்திரக்கோலை உன்னிடமே விட்டுச் செல்கிறேன். இராஜகுமாரன் வந்து உனக்கு உயிர் கொடுக்கும் வரை நீ சிலை யாக இரு என்று கூறி பூதம் எங்கோ மறை ந்து விட்டது என்றாள்.

சோமராஜ் பல கேள்விகள் கேட்கத் துடித்தான்.அதற்குள் இளவரசி இப்படியே பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆவது? முதலில் எல்லோரையும் எழுப்புவோம் என்று கூறி விட்டு அவனை அழைத்துக் கொண்டு சென்றாள்.

சோமராஜ் அனைவரையும் தங்க மந்திரக்கோலால் தொட சற்று நேரத்தில் இராச்சியத்தில் இருந்த அனைவரும் உயிர் பெற்றனர். எங்கு பார்த்தாலும் ஒரே மகிழ்ச்சி யும் கோலாகலமுமாகத் திகழ்ந்தது. எல்லோ ரும் பழைய படி உயிர்பெற்று எழக் காரணமாயிருந்த சோமராஜை தலையில் தூக்கி வைத்து அனைவரும் கொண்டாடினர்.

சில நாட்களுக்குப் பின்னர் ராஜா தன் சபையைக் கூட்டினார். நமது உற்சாகத்தில் முக்கியமான ஒரு விடயத்தை இதுவரை கவனிக்கத் தவறிவிட்டோம். பூதம் மீண்டும் வந்தால் என்ன செய்வது என்றார்.

உடனே சோமராஜ் எழுந்து மகாராஜா வெள்ளி மந்திரக் கோலினால் தான் பூதம் உங்கள் யாவரையும் உயிரற்ற சிலைகள் ஆக்கி யது என்று அறிந்தேன். அந்த மந்திரக் கோல் இப்போது நம்மிடம் உள்ளது தவிர உயிர் கொடுக்கும் தங்கக்கோலும் நம்மிடம் உள்ளது. ஆகவே பூதத்தால் ஒன்றும் செய்யமுடியாது என்றான்.

சரிதான் பூதம் நம்முடன் போரிட முயன்றால் அதை எப்படி எதிர்ப்பது என்று மன்னர் கேட்டார்.

அது மடடும் வரட்டும். என்னிடம் இருந்து அது தப்ப முடியாது. நான் உங்கள் படைகளைத் தலைமை தாங்கிச் சென்று பூதத்துடன் மோதினால் அது தாக்குப் பிடிக்காது என்றான் சோமராஜ்.

ஆகா! இத்தகைய வீரம் செறிந்த இளவரசன் நம்முடனே இருந்து விட்டால் நாம் கவலையே பட வேண்டாம் என்றார் முதன் மந்திரி. அதற்கு மன்னர் இளவரசரை இங்கேயே இருத்திக் கொள்வது இரத்ன குமாரியின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது என்றதும் இளவரசியின் முகம் நாணத்தால் சிவந்தது.

மன்னர் சோமராஜிடம் இள வரசே என் குமாரியை மணக்க சம்மதமா என்று கேட்டதும் சோமராஜ், மகாராஜா! நான் பல நாடுகளை சுற்றி வருவதாகக் கூறிவிட்டு பயணம் புறப்பட்டதின் உள் நோக்கங்களில் எனக்குத் தகுந்த மனை வியை தேடுவதும் ஒன்றாக இருந்தது. நீங்கள் என்னிடம் இப்போது கேட்பதனால் ஒளிக்காமல் கூறுகிறேன்! எனக்கு உங் கள் மகள் இரத்தினகுமாரியை மிகவும் பிடித்திருக்கிறது! என்று கூறி முடித்ததும் இளவரசியின் முகம் குங்குமமாய் சிவந்தது.

மகாராஜா! நான் என் பெற்றோரின் சம்மதத்தையும் அறிந்து வருகிறேன்! என்று சோமராஜ் புறப்பட, உங்களுடன் என் முதன் மந்திரியையும் அனுப்புகிறேன். என் சார்பாக அவர் என் மகளின் திருமண விடயத்தைப் பற்றி உங்கள் பெற்றோரிடம்



எடுத்துரைப்பார்! என்று கூறி தன் முதன் மந்திரியையும் அனுப்பி வைத்தார்.

இந்த விடயம் அறிந்ததும் சோமராஜின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் திருமணத்திற்கு இசைந்தனர். சோமராஜ், இரத்தின குமாரியின் திருமணம் கோலாகலமாக ரத்னகிரியில் நடைபெற்றது. பூதத்தை எதிர் கொண்டு மோத, சோமராஜ் ரத்னகிரியிலேயே தங்கினான். ஆனால் என்ன காரணத்தினாலோ பூதம் மீண்டும் அங்கு வரவேயில்லை.

# ஐ.நா.மனித உரிமை பிரதிநிதிகளை இலங்கைக்குள் அனுமதிக்க முடியாது

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதியளிக்கப்பட்டமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் தொழில்நுட்பசார் ஆலோசனைகளை வழங்குவதற்காக பிரதிநிதிகள் குழுவொன்றை அனுப்பி வைக்க மனித உரிமைப் பேரவை திட்டமிட்டுள்ளது.

எனினும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதிநிதிகள் குழு தொடர்பில் கடந்த 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் ஊடாக தகவல் அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதமளவில் இந்தப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் விஜயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் தீர்வுத் திட்டத்திற்கு இடமில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (அ-2)

## நிலஅதிர்வு தொடர்பில் விசேட ஆய்வு

நாட்டின் சில பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பில் விசேட ஆய்வொன்றை மேற்கொள்வதாக புவி சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் குறிப்பிடுகின்றது.

இந்நில அதிர்வை நாட்டின் உள்ளக ரீதியாக அல்லது நாட்டை அண்மித்த கடற்பரப்பில் ஏற்பட்ட ஒன்றென கருதப்படுகிறது.

இந்த நில அதிர்வு இலங்கையின் புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிரதேச அலுவலகங்களில் மாத்திரமே பதிவாகியதுடன் சர்வதேச புவியியல் மையங்கள் எதிலும் பதிவாகவில்லை.

நுவரேலியாவில் நிலத்துக்கடியிலான நில அதிர்வு 3.6 ரிக்டர் அளவில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


இணுவில் கந்தசுவாமி கோயில்

பெருந்திருவிழா



மூன்றாம் திருவிழா (28.05.2012)

மயில் ஏறி வந்து இரட்சிப்பாயோ

சூர்மார்பும் குன்றும் ஒன்றாகத் துளையிட்ட
உன்கூர்வேலுக்காகாதோ
கொடுமை மிகு கொலை கொள்ளையிவை
கூண்டோடு தொலைக்க
யார்மேலும் பிழையில்லை நாம் செய்த
வினைப் பயனன்றோ


மாவை மணி

(சி-081)

3ஆம் திருவிழா உபயகாரர்


# வெள்ளைவானில் வந்தவர்களால் இளம் பெண்ணொருவர் கடத்தப்பட்டார்

## கோண்டாவில் பகுதியில் பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் வெள்ளைவானில் இளம் பெண்ணொருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் அப்பகுதியில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மோட்டார் சைக்கிளில் தனது தந்தையுடன் வீதியால் வந்து கொண்டிருந்த இளம் பெண்ணொருவரே வெள்ளைவான் ஒன்றில் வந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடத்தி செல்லப்பட்ட பெண்ணின் தந்தையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பட்டப்பகலில் பலர் பார்த்திருக்க மேற்கொள்ளப்பட்ட இந்த ஆட்கடத்தல் சம்பவம் தொடர்பாக கடத்தப்பட்ட பெண்ணின் தந்தையான செல்வராசா விபரிக்கையில்,

நாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதனால் இன்று (ஞாயிற்றுக்கிழமையான நேற்று) நடைபெறும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்காக உரும்பிராய் கிழக்கில் உள்ள வீட்டிலிருந்து வந்து கொண்டு இருந்தோம்.

என்னை பின்னால் ஏற்றிக் கொண்டு மகள் அர்ச்சனாம்பிகா (வயது 23) தான் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தாள்.

சரியாக காலை 8.50 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு அண்மையில் வந்து கொண்டிருந்தோம்.

நாம் வந்து கொண்டிருந்த வீதியில் ஏற்கனவே ஒரு சிறிய ரக கூலர் வாகனம் நின்றிருந்தது. அது பழுதடைந்தது போன்றும் தாம் அதைத் திருத்துவது போன்றும் சில இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

அந்த வாகனத்தை வீதியால் வந்து கொண்டிருந்த நாம் நெருங்கியதும் பிறிதொரு ஹயஸ் வெள்ளை நிறவான் கண்ணாடியைத் திறந்தபடி அப்பகுதியில் இருந்த பற்றைகள் நிறைந்த ஒழுங்கைக்குள் இருந்து திடீரென வந்து எம்மை இடைமறித்தது.

உடனே அந்த வாகனத்திலிருந்து இறங்கிய இரண்டு இளைஞர்கள் எனது கழுத்தை பிடித்து திரிகி வீதியோரமாயிருந்த கிடங்கினுள் தள்ளிவிட்டார்கள்.

பின்பு எனது மகளையும் இழுத்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டார்கள். இதனை அப்பகுதியிலுள்ள தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கண்டு கடத்தல்காரர்களைத் துரத்திப் பிடிக்க முற்பட்டனர். இருப்பினும் அவர்கள் வேகமாக எனது மகளை கொண்டு சென்று விட்டனர்.

என்னை கிடங்கினுள் தூக்கி எறிந்ததனால் உடலில் காயங்கள் ஏற்பட்டதுடன் அந்தக் கிடங்கிலிருந்த பீங்கான்கள் எனது கையை கிழித்துவிட்டது.

எனது மகள் அர்ச்சனாம்பிகா அவர்களுடன் விருப்பப்பட்டு செல்லவில்லை. அவளைக் கடத்திக் கொண்டே சென்றுள்ளனர் என அழுதபடி தெரிவித்தார் கடத்தப்பட்ட பெண்ணின் தந்தையான செல்வராசா. இருப்பினும் குறித்த பெண் கடத்தப்படவில்லை அவர் விருப்பப்பட்டே சென்றுள்ளார். கடத்தப்பட்டதாக கூறப்படும் பெண்ணின் தந்தை பொய் சொல்கின்றார் என கோப்பாய் பொலிஸார் மறுப்பு தெரிவித்தனர்.

இருப்பினும் குறித்த இளம் பெண் தொடர்பில் முறைப்பாட்டை பதிவு செய்த பொலிஸார் வீதியில் கிடந்த மோட்டார் சைக்கிளை மீட்டதோடு நீதிமன்றத்திற்கு வழக்கை தாக்கல் செய்வதாக கூறியிருந்தனர்.

பட்டப்பகலில் வாகனத்தில் வந்த கிட்டத்தட்ட 7 பேரைக் கொண்ட இளைஞர்குழு இளம் பெண்ணொருவரை கடத்திச் சென்றது அப்பகுதியில் சில மணி நேரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## கொழும்பு நகரில் கமரா குற்றச்செயல் இடம்பெறாது

(கொழும்பு)

கொழும்பு நகரின் அனைத்து பகுதிகளும் உள்ளடங்கும் வகையில் சீ.சீ.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதால் நகரில் குற்றச் செயல்களோ கொள்ளைச் சம்பவங்களோ இடம்பெற வாய்ப்பில்லை எனவும் அவ்வாறு எவரும் குற்றச் செயல்களில் ஈடுபட முடியாது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பொருத்தப்பட்ட இந்த கமரா கட்டமைப்பின் ஊடாக அடையாளம் காணப்பட்ட போக்குவரத்து விதிகளை மீறியவர்களுக்கு எதிராக சட்டநவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்களையும் கண்டறிய முடிந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# பாராளுமன்ற தெரிவுக்குழுமூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது

## சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டம் ஓர் பொய் முயற்சி என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. எனவே, ஜே.வி.பி.கட்சி பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காது.

வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டங்கள் நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே சர்வகட்சிகளின் பங்களிப்புடன் பல கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் மீண்டும் அனைத்து கட்சிகளையும் கூட்டி கூட்டம் நடத்த வேண்டிய அவசியமில்லை.

சமூக சமநிலையை உறுதிப்படுத்தும் வரையில் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் காலணித்துவ ஆட்சி காலம் முதலான சமூகப் பிரச்சினைகளை கவனிக்க வேண்டும் என்றார். (அ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பு

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தினால் இந்த அறிக்கை முன்மொழிவுகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மொழிபெயர்க்குமாறு அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆணைக்குழுவின் அறிக்கை முன்மொழிவுகள் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இந்த அறிக்கை தமிழ் சிங்கள மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்படவில்லை.

தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதனால் முன்மொழிவுகள் தொடர்பிலான விவாதங்கள் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பொன்சேகா சிறையில் இருப்பதையே ரணில் விரும்புகிறார்-டிரான் அலஸ்


சிறையில் இருந்து விடுதலையாகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்ந்தும் சிறையில் இருப்பதையே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க விரும்புகிறார் என்று ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனினும் அவரின் விடுதலை தொடர்பில் பேச்சு நடத்தியவர்கள் முழுமையான விடுதலைக்கான விடயங்களை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என்று ரணில் விக்ரமசிங்க அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள டிரான் அலஸ் சரத் பொன்சேகா விடுதலையாகியுள்ளார். எனினும் ரணில் விக்ரமசிங்கவின் கருத்தை பார்த்தால் அவர் தொடர்ந்தும் சரத் பொன்சேகா சிறையில் இருக்க வேண்டும் என்று விரும்புவதாகவே அமைந்துள்ளது.

இதேவேளை சரத் பொன்சேகாவுக்கு மீண்டும் இராணுவ ஜெனரல் பதவி வழங்கப்படவேண்டும். அவருக்கு குடியியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பவற்றை வலியுறுத்தும் முகமாக ஐக்கிய தேசியக் கட்சி சட்டவரைபுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் அஜித் பெரேரா ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். (அ-2)



காரைநகர் பிரதேசத்தில் மரணமடைந்த வாடிக்கையாளரின் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் என்.சுகுணன் இழப்பீட்டு கொடுப் பனவை வழங்குவதையும் அருகில் விற்பனை முகாமையாளர், அபிவிரு த்தி உத்தியோகத்தர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

HDFC
GOLD LOAN
பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து
பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(சு/095)

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800

அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK
The Housing Bank

www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)

# வடக்கு -கிழக்கில் புகையிலை பாவனையாளர் அதிகரிப்பு

## இலாபம் மட்டும் 5.1 பில்லியன் ரூபா!

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவு எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஜூன் மாதம் 16 ஆம் திகதி வரை புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினங்களாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

குறித்த காலப்பகுதியில் சமுர்த்தி கொடி நிகழ்ச்சி திட்டமாக அறிவித்துள்ளது. கொடி வாரத்தில் கொடி விற்பனை மூலம் பெறப்படும் பணத்தினை சமுர்த்தி பயனாளிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக வடக்கு கிழக்கில் புகைத்தல் மற்றும் மதுவிற்பனை பெரிதும் அதிகரித்துள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி பிரிவு துண்டுபிரசுரங்களையும் விழிப்புணர்வு பிரசாரங்களையும் செய்து வருகின்றது.

புகைத்தலால் பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படுமென பிரசாரங்கள் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் புகைப்பவர்களின் எண்ணிக்கை முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமூக அபிவிருத்தி பிரிவு புள்ளிவிபரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் வடகிழக்கில் நிலவும் போக்குவரத்து வசதியை பயன்படுத்தும் புகையிலை விற்பனை நிறுவணங்கள் பல்வேறு உத்திகளை பயன்படுத்தி புகையிலை விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

2010 ஆம் ஆண்டு வடகிழக்கில் 5.1 பில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளதாக புகையிலை விற்பனை செய்யும் நிறுவனங்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளின் முடிபுகள்

**400 மீற்றர் தடைதாண்டல்**

ஏ.அன்ரினிஸ் (யா/மாதகல் சென் ஜோசப்), பி.பானுப்பிரியா (யா/விக்டோறியா கல்லூரி), எம். ரம்யா (யா/ அத்தியார் இந்துக் கல்லூரி)

**5000 மீற்றர் ஓட்டம்**

ஏ.சிவஸ்திகா (யா/விடத்தல் பளை கமலாசினி), டி.நிதுஜா (யா/ விக்டோறியா கல்லூரி), என்.புவிதா (யா/ மாதகல் சென் ஜோசப்)

**17 வயதின்கீழ் பிரிவு பெண்கள்**

**400 மீற்றர் தடைதாண்டல்**

ஏ.அனற்(யா/ மாதகல் சென் ஜோசப்), ஐ.டியுறியா (யா/ மாதகல் சென் ஜோசப்) ரி.அகிலா (யா/வட்டு.இந்து கல்லூரி)

**கோலூன்றிப் பாய்தல்**

ஜே.அனித்தா (யா/ மகாஜனா கல்லூரி), எம்.கென்சிகா (யா/ அருணோதயா கல்லூரி), ஆர் ஜனனி (யா/ அருணோதயா கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

எஸ்.நாசா (யா/சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை),ஜே.சுபீசனா (யா/ இராமநநாதன் கல்லூரி),பி.கபிலா (யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை)

**100 மீற்றர் தடைதாண்டல்**

ஆர் கௌசிகா (யா/மல்லாகம் மகா வித்தியாயம்), ஏ.பிரவீனா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஏ.ஜாமினி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு)

**நீளம்பாய்தல்**

எம். ஜோய் காருண்யா (யா/ சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி), எஸ்.மலர்வாணி (யா/வட இந்து மகளிர் கல்லூரி) எம்.கேதராணி (யா/ நயினாதீவு ஸ்ரீ கணேசா)

**800 மீற்றர் ஓட்டம்**

ஜே.ஜெயந்தினி (யா/ உயரப்புலம் ம.வி), ஜே.ஆன் பற்றீசியா (யா/மாதகல் சென் ஜோசப்) , ஆர் இராஜலட்சுமி (யா/ உசன் இராம நாதன் வித்தி

**21 வயதின் கீழ் பிரிவு பெண்கள்**

**1500 மீற்றர் ஓட்டம்**

பி.மேரி லிப்பென் ஜெரீனா (யா/ மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), என்.ஜெயனிசா (யா/ வேலணை மத்திய கல்லூரி), பி.தமிழி (யா/ புத்தூர் எஸ்.எஸ்.சி)

**100 மீற்றர்**

ஈ.காவேரி (யா/ அருணோதயா கல்லூரி), எஸ்.சுபர்ணா (யா/இராமநாதன் கல்லூரி) ஈ.யக்சனா (யா/ அருணோதயா கல்லூரி)

**200 மீற்றர்**

ஈ.காவேரி (யா/ அருணோதயா கல்லூரி), எஸ். சுபர்ணா (யா/இராமநாதன் கல்லூரி),எம்.மித் தில்டா (யா/ சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி)

**400 மீற்றர்**

ஏ.மேர்சி (யா/ உடுவில் பெண்கள் கல்லூரி), எஸ்.தனுஜா (யா/ அருணோதயா கல்லூரி), ரி.நித்தியா (யா/ இராமநாதன் கல்லூரி)

**400 தடைதாண்டல்**

ஜே.மதுரா (யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), எஸ்பிருந்தா (யா/ வயாவிளான் மத்திய மகா வித்தி, ஜே.கஜானா (யா/ உடுவில் பெண்கள் கல்லூரி)

**5000 மீற்றர்**

கே.ஜனுசா (யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), பி.கினோபா (யா/ இராமநாதன் கல்லூரி), பி.மேரிலிப்பென் ஜெரேனா (யா/ மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை)

**குண்டெறிதல்**

ஜே.சர்மிளா (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜே.சுசனா (யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.ஜெனார்த்தனி (யா/ மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை)

**4X400 மீற்றர்**

யா/ அருணோதயா கல்லூரி, யா/ உடுவில் பெண்கள் கல்லூரி யா/ இராமநாதன் கல்லூரி. (முற்றும்)

இறைவனுக்கு அஞ்சலி செய்வதை விட பொதுச் சேவைக்கு அஞ்சலி செய்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஈவிரக்கம் இல்லாத இனமாகிப் போனோமோ!

தமிழினத்திற்கு இருக்கக்கூடிய சிறப்பு இயல்பு என்ன என்று யாரேனும் கேட்டால் அது அன்பும் பண்பும் கொடையும் நட்பும் என்பதாகவே விடையாக இருக்கும்.

எவ்வுயிர் மீதும் அன்பு காட்டுதல் என்பது தமிழர்களின் வழக்கம் என்பதாலேயே பாரி மன்னன் முல்லைக்கு தன் தேரைக் கொடுத்தான்.

ஈவு, இரக்கம், கருணை, கழிவிரக்கம், பாசம் என அத்தனையும் அன்பின் வெளிப்பாடாகும்.

இதன் காரணமாகவே அன்பே சிவம் என்று தமிழினம் சான்றுபடுத்தியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போதெல்லாம் தமிழினம் இரக்கமில்லாத இனமாகிப் போய் விட்டதா என்று ஐயம் கொள்ளும் அளவில் நிலைமை உள்ளது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை வல்லவெளிப் பகுதியில் இளைஞர் ஒருவர் விபத்தில் இறந்து போனார். இளைஞனை மோதிய வாகனம் தப்பிச் சென்ற நிலையில், மோதுண்ட அந்த இளைஞன் குற்றுயிராய் குப்புறக் கிடந்து துடித்துக் கொண்டிருக்கின்றான்.

மக்கள் கூடி நின்று பார்க்கின்றனர். அந்தோ பரிதாபம்! என்று பேசிக் கொள்கின்றனர். ஆனால் யாருமே அந்த இளைஞனைத் தூக்கி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவோ உயிர்பிரிகின்ற போதேனும் உபாதையில்லாமல் சரித்து, நிமிர்த்தி தண்ணீர் தெளிக்கவோ முன்வரவில்லை.

இப்படியான சம்பவம் வல்லவெளியில் மட்டுமல்ல விபத்துக்கள் நடந்த பல இடங்களில் அறியப்பட்ட வேதனையான நிகழ்வுகள்தான்.

விபத்தில் சிக்கிய ஒருவருக்கு உதவுவதன் மூலம் அவரின் உயிரை காப்பாற்ற முடியும்.

ஆனால் உதவுவதற்கு யாரும் இல்லை. ஏன் இப்படி? எல்லோரும் தமிழினம். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் உறவுகளும் அறிமுகமானவர்களும். இப்படியாக இருக்கையில் துடிக்கின்ற உயிரைக் காப்பாற்ற யாரும் முன்வராதது ஏன்? இது குறித்து நான் சிந்திக்கத் தவறுவோம் ஆயின் நிலைமை மிக மோசமானதாக மாறிவிடும்.

விபத்தில் சிக்கிய ஒருவரைக் காப்பாற்றப் போய் பொலிஸ்நிலையம், நீதிமன்றம் என்று அலைவதை விட, ஐயா! வேண்டாம் ஆளைவிடுங்கள் என்றிருந்தால்,

அதே கதிதான் நமக்கு மட்டும் வராது என்பதற்கு ஏதேனும் உத்தரவாதம் உண்டா என்ன?

எனவே ஆபத்தில் சிக்கியவர்களை காப்பாற்று கின்ற இரக்கப்பண்பை எங்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

பாடசாலைகள், பொது அமைப்புகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

முன்பெல்லாம் வீதியில் ஒரு விபத்து ஏற்பட்டுவிட்டால், விழுந்தவரைத் தூக்க– ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தப்போக்கு ஏற்படுவதைத் தடுக்க– வைத்தியசாலைக்கு கொண்டோட – இரத்தம் தேவைப்பட்டால் இதோ! என்னிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூற ஒரு பெரும் இளைஞர் கூட்டம் எங்களிடம் இருந்தது.

ஆனால், இன்று அந்த நிலைமை மலையேறி விட்டதை நினைக்கும் போது இதயம் வெடிக்கின்றது.

விபத்தில் சிக்கிய என்பிள்ளைக்கு யாரேனும் உதவியிருந்தால், அவன் உயிர் பிழைத்திருப்பான் என்று ஒரு தாய் கதறி அழுவதற்கு சந்தர்ப்பம் வைக்கும் எவரும் சமூக சுகம் மிக்கவராக வாழ முடியாது.

ஆகையால் ஆபத்தில்– விபத்தில் மற்றவருக்கு உதவ பொதுமக்கள் முன்வரவேண்டும். உதவி செய்ததற்காக நாம் கஷ்டப்பட்டாலும் அதுவும் பெரும்பேறு என்று உணர்வோம்.

# தமிழ் கைதிகளின் விடுதலைக்காக சிறைச்சாலைக்கு முன் ஆர்ப்பாட்டம்

## மனோ கணேசன் அழைப்பு

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் கடத்தப்பட்டு காணாமல் போனோரின் விடுதலை என்பவை அப்பாவி தமிழ் பாமரமக்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மற்றும் மனித நேய பிரச்சினைகள் ஆகும். அரசியல் தீர்வு வரும் வரை மனித உரிமைகள் மீறப்படுவதை நாம் சகித்துக்கொண்டு காத்திருக்க முடியாது என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எனவே சிறைக்கூடங்களில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி நாளை செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு பொரளை வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு முன் ஒன்றுகூடுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கைதிகளின் குடும்ப அங்கத்தவர்களும் அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஜனநாயக மக்கள் முன்னணி உட்பட நவசமசமாஜக் கட்சி, முன்னிலை சோஷலிச கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி ஆகிய கட்சிகளினால் நடத்தப்படும் சாத்வீக ஆர்ப்பாட்டம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான களம் கூட ஏற்படுத்தப்படாத போது தமது உறவுகளை பிரிந்து வாழும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் கண்ணீர் விடாதீர்கள் என நாம் செல்லா முடியாது. அரசாங்கம் தரும் போலி வாக்குறுதிகளை நம்பி நாம் பதிலுக்கு மக்களுக்கு வாக்குறுதி அளிக்க முடியாது.

எமது மக்களில் நியாயமான எதிர்பார்ப்புக்களை இன்று தென்னிலங்கை முற்போக்கு அணியினரும் ஏற்றுக்கொண்டு வருவது நல்ல அறிகுறியாகும்.

இந்நிலையில் எமது கூட்டு ஏற்பாட்டில் நடைபெற ஏற்பாடாகி இருக்கும் இந்த சாத்வீக ஆர்ப்பாட்டத்தில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் சமூக, மத நிறுவனங்களையும் கலந்துகொள்ளும்படி அழைக்கின்றேன்.

கைதிகளில் காணாமல்போனோரின் குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டும். இதன் மூலமே நாட்டினதும் சர்வதேசத்தினதும் மனச்சாட்சியை எம்மால் தட்டியெழுப்ப முடியும் என்பதை நாம் நினைவில் நிறுத்தி கொள்ள வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ–2)

# கிழக்கு முதலமைச்சரின் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளரிடம் முறையிடுவோம்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக இராணுவத்தினரின் ஆதரவை பிள்ளையான் பெற்றுக்கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து தேர்தல் ஆணையாளர் கவனம் செலுத்த வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் அசன் அலி தெரிவித்துள்ளார்.

பிள்ளையானுக்கு இராணுவத்தினர் ஆதரவளித்து வருவதாக வெளியான தகவல்கள் உண்மையா என்பது எமக்குத் தெரியாது எனவும் அவ்வாறு உண்மையென்றால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் எவ்வாறெனினும் பிள்ளையானின் ஆட்கள் முஸ்லிம் பிரதேசங்களில் பிரசாரம் செய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத் தேர்தல் நடைபெற்ற தினத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றது. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார். (அ–2)

# வட்டுக்கோட்டையில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்குள் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பொதுமக்களினால் அடையாளம் காணப்பட்ட மேற்படி கைக்குண்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனால் அப்பகுதியில் நேற்று சில மணிநேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ந–6)

# மூக்கை கடித்த குற்றச்சாட்டில் ஐ.தே.க. எம்.பி மீது நடவடிக்கை

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் துனேஷ் கங்கந்தவை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நபர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் காரணமாகவே அவரை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகர் ஒருவருடனான மோதலின் போது அவரின் மூக்கை நாடாளுமன்ற உறுப்பினர் கடித்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த வர்த்தகர் நேற்று முன்தினம் இரவு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந–8,11)

# கசகஸ்தான் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கசகஸ்தான் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கசகஸ்தான் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பை ஏற்று அமைச்சர் பீரிஸ் அந்த நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் வெளிவிவகார அமைச்சர் ஒருவர் கசகஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது. (அ–2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஆன்மீக பலமே நாட்டின் பலம்



குழந்தை தன் தேவைக்கு தாயை நம்பியிருக்கின்றது. அதுபோல வளர்ந்த பின்னும் மனிதன் தன் தேவைகள் அனைத்திற்கும் உலகநாயகியான ஜகன்மாதாவை நம்பி வாழ்கிறான்.


அனைத்து சக்தியும் கொண்ட அம்பாள் கருணை வடிவத்துடன் எங்கும் நிறைந்திருக்கின்றாள். உலகின் இயக்கத்திற்கு ஆதாரமாகத் திகழ்கிறாள்.

இந்தியாவில் பெண்களுக்கு தரப்படும் மதிப்பு உயர்வானது. தெய்வத்தை அன்னையாகக் கருதி வழிபாடு செய்தால் ஆன்மீக வாழ்வில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

குழந்தைகள் தாயிடமே அதிக பாசத்தை காட்டுகின்றனர். இதனால் தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தாய்க்கு முதலிடம் தரப்படுகின்றது.

ஆன்மீக பலத்தால் மட்டுமே நாடு எழுச்சி அடையப்போகின்றது. கடவுளிடம் கொண்ட நம்பிக்கையால் மக்கள் பலம் பெற்றிருக்கிறார்கள்.

மனிதன் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளனாக இருக்கின்றான். அவனுக்கு தேவையான அனைத்து வலிமையும் உதவியும் அவனுக்குள்ளேயே இருக்கின்றது.



# உயிர் மீண்ட காளை மாடு 13

## ஏல விற்பனைக்கு முன்னதாக கண்ணீர் விட்டு அழுத காளைமாடு

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இக் காளை மாடு மிகவும் சாதுவானதாக இருந்தமையால் அங்கு கடமையாற்றிய பணியாளர்கள் இக் காளைமாட்டின் மீது நிறைந்த அன்பு காட்டினார்கள்.

பார்த்தால் யானையின் தோற்றத்தில் இருந்த இக்காளை மாட்டிற்கு யாழ்ப்பாணத்து சுவாத்தியம் மிகவும் பொருத்துடையதாயிற்று.

காளைமாட்டைப் பராமரித்தவர்கள் 'அரசு' என்று அதற்குப் பெயர் சூட்டினர்.

தென்பகுதியில் இக் காளை மாட்டிற்கு பெயர் வைத்தார்களா? என்பதை அறிய முடியாமல் போனதாயினும் திருநெல்வேலியில் 'அரசு' என்றவுடன் அழைத்தவரைப்பார்க்கும் அளவில் அந்தப் பெயருக்கு காளை மாடு பழக்கப்படலாயிற்று.

### ஒரு நாள் உணவு

யானையைக் கட்டித் தீனி போடுதல் என்ற பழமொழியைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

அந்தப் பழமொழிக்கு 'அரசு' என்ற இக்காளைமாடும் பொருத்துடையதென்றே கூற வேண்டும்.

ஒரு நாளைக்கு மட்டும் பின்வரும் அளவில் உணவு வழங்கப்படவேண்டும்.

1. மாஸ் -5 Kg
   (Dairy Mash)
2. மினரல் மிக்சர் -50 g
3. வைக்கோல் -6 Kg
4. புல் -20 Kg

இது தவிர ஒவ்வொருநாளும் குளிப்பாட்டல் வேறு.


செயற்கை முறைச் சினைப் படுத்தல் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த இந்தக் காளை மாட்டைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் ஆச்சரியப் படாமல் இருந்ததேயில்லை.

இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயிலில் இருக்கக்கூடிய பெரிய நந்தியின் தோற்றத்தைக் கொண்ட இந்தக் காளைமாடு விவசாயக் கண்காட்சியின் போதெல்லாம் அனைவரையும் ஈர்த்துக் கொண்டது.

காளைமாட்டைப் பார்ப்பதற்காகவே நிறையப்பேர் விவசாயக் கண்காட்சிக்கு வந்தனர் என்று கூறினால் அதில் எந்தவித மிகைப்படுத்தலும் இல்லை.

விவசாயக் கண்காட்சியின் போது காளை மாட்டின் இரு கொம்புகளுக்கும் பொன் நிறத்திலான வர்ணம் பூசப்பட்டு காட்சிப்படுத்தியபோது அதன் அழகு அற்புதமாக இருந்தது என வியந்து கூறுவார் வடமாகாணக் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி அமிர்தலிங்கம் அவர்கள். இவ்வாறாக 25.11.2009 முதல் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் செல்லப் பிள்ளையாக இருந்த காளை மாட்டின் பயன்பாட்டை முடிபுக்குக் கொண்டுவர அதிகாரிகள் முடிவு செய்தனர்.

திருநெல்வேலியில் காளை மாட்டைப் பராமரித்துச் செயற்கை முறைச்சினைப்படுத்தலை மேற்கொள்வதை விட, கண்டியிலிருந்து சீமனை யாழ்ப்பாணத்திற்கு



அனுப்பி அதன்மூலம் சினைப் படுத்தலை மேற்கொள்வது செலவுச் சிக்கனமானது என்று உயர் மட்டம் எடுத்த முடிபுகாரணமாக, 'அரசு' என்ற காளை மாட்டை ஏலத்தில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அரச அமைப்புகளில் ஏல விற்பனை என்றால் அதற்குரிய ஒழுங்குமுறைகள் அத்தனையும் செய்தாகவேண்டும்.

அதில் முக்கியமானது வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியைப் பெறுவதாகும்.

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்தில் இருக்கக்கூடிய அரசு என்ற இந்தக் காளைமாடு உட்பட ஏனைய காளை மாடுகள் மற்றும் ஆட்டுக் கடாக்களுக்கும் சேர்த்தே ஏல விற்பனைக்கான அனுமதி கேட்டு கடிதம் எழுதப்படுகின்றது.

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்களத்தால் எழுதப்பட்ட கடிதத்தை ஆராய்ந்த வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்தித் திணைக்களம் மூன்றாம் திகதி ஜனவரிமாதம் 2012 இல் அனுமதி கொடுத்தது.

ஏல விற்பனைக்கான அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து ஏல விற்பனை பற்றிய அறிவித்தல் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது.

### ஏல விற்பனை

22 ஆம் திகதி மார்ச் மாதம் 2012 அன்று ஏலவிற்பனைக்கான நாள் என தீர்மானிக்கப்பட்டது.

திருநெல்வேலி கால்நடை உற்பத்தித்திணைக்களத்தில் வளர்க்கப்பட்ட நான்கு காளைமாடுகளும் ஐந்து ஆடுகளும் ஏலவிற்பனைக்குத் தயாராகின.

புல்லும் தண்ணியும் வைத்து முகம் தடவி வளர்க்கப்பட்ட மாடுகளும் ஆடுகளும் இன்னும் ஒரு சில தினங்களில் இந்த மண்ணில் இருக்கப்போவதில்லை. அவை மனிதர்களுக்கு உணவாகி விடப்போகின்றன என்பதை ஐந்தறிவு படைத்த அந்த ஜீவ ராசிகள் அறிந்திருக்க வில்லையாயினும்,

அதனை வளர்த்தவர்கள், பராமரித்தவர்கள், நோய் வந்த போதெல்லாம் சிகிச்சை அளித்தவர்கள் நன்றாகவே அறிந்திருந்தனர்.

இப்படியாக ஏல விற்பனை நாள் தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அரசு என்ற இக்காளை மாட்டுக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டது.

கட்டுக்கடங்காத காய்ச்சல். டாக்டர்கள் தீவிரமாக சிகிச்சை அளிக்கின்றனர். திருநெல்வேலி கால்நடைத் திணைக்ளத்தில் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் உள்ள சுவர்க்கூட்டில் தலையை வைத்து அரசு கண்ணீர் விடுகின்றது.

அந்தக் கண்ணீருக்கான அர்த்தம் தான் என்ன?


காய்ச்சலின் வெப்பாரத்தால் ஏற்பட்டதா? அல்லது இன்னும் சில தினங்களில் இந்த உலகை விட்டுப்பிரியப் போகின்றேன் என்ற நினைப்பால் ஏற்பட்டதா? இவை இரண்டுமே அல்ல. கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானிடம் செல்லப் போகின்றேன். அவனைத் தரிசிக்கப் போகின்றேன் என்பதை உணர்ந்த போது கண்ணீர் சொரிந்ததா?

எப்படி அர்த்தம் கொண்டாலும் அரசு கண்ணீர் விட்ட போது பராமரிப்பாளர்களால் அதனைத் தாங்கவே முடியவில்லை.

யார் என்ன நினைத்தாலும் எழுதப்பட்ட விதியாக அதது அந்தந்த நேரங்களில் நடந்தே ஆகும். அதைத்தான் விதி என்கின்றோம். அந்த விதி காளைமாடுகளுக்கும் ஆட்டுக்கடாக்களுக்கும் விதிவிலக்காகிப் போகவில்லை. ஏலவிற்பனைக்கான நாளும் நேரமும் சேர கட்டளைகள் எழுதப்படுகின்றன. அதோ ஏலத்திற்கான மணி அடிக்கப்படுகிறது.

விதுரன்

# ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் சென்னையை வீழ்த்தி முதல்முறையாக சம்பியனானது கொல்கத்தா




(சென்னை)


ஐந்தாவது ஐ.பி.எல். இருபது -20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சென்னையை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி கொல்கத்தா அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 4-ம் திகதி ஆரம்பமாகிய 5-வது ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இப்போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கௌதம் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

3-வது முறையாக சம்பியனாகிவிட வேண்டும் என்று சென்னையும்,முதல் முறை ஐ.பி.எல்.சம்பியனாக வேண்டும் என்ற துடிப்புடன் கொல்கத்தாவும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.






இதனையடுத்து ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய மைக் ஹசி மற்றும் முரளி விஜய் இருவரும் மெதுவாக ஆட்டத்தை ஆரம்பித்து பின்னர் விறுவிறுப்பாக்கினர்.

முதல் 3 ஓவர்கள் ஓட்டவேகம் மிகக் குறைவாகவே இருந்தது.

பின்னர் அடித்து ஆடத் தொடங்கினர்.

கடந்த ஆட்டத்தைப் போல் நேற்றும் கலக்குவார் என எதிர்பார்க்கப்பட்ட விஜய், 32 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களை எடுத்தார்.

அவருக்கு இணையாக மைக் ஹசி 43 பந்துகளில் 2சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களை எடுத்தார்.

விஜயை அடுத்துக் களமிறங்கிய சுரேஷ் ரெய்னாவின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

சிக்ஸர்கள் அடித்துக் கலக்கிய சுரேஷ் ரெய்னா 5 சிக்ஸர்கள் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

அவர் 38 பந்துகளில் 5 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களைக் குவித் தார்.

தோனி தன் பங்குக்கு 9 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 14 ஓட்டங்கள் எடுத்தார்.

ரெய்னா ஆட்டத்தின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார்.


ஆக, 20 ஓவர்கள் நிறைவில் சென்னை அணி 3 விக்கெட்டை இழந்து 190 ஓட்டங்களைச் சேர்த்தது.

கொல்கத்தா அணிக்கு 191 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய கொல்கத்தா அணியில் ஆரம்பத்தில் அதிர்ச்சி கொடுத்தார் காம்பீர்.

அவர் 2 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஹில்பெனாஸ் பந்தில் போல்டானார்.

ஆனால் ஆரம்ப வீரர் பிஸ்லாவும் அடுத்து வந்த கலிஸும் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இவர்கள் இருவரும் இணைந்து அதிரடி காட்டினர்.



## பிஸ்லா அபாரம்

சிறப்பாக விளையாடிய பிஸ்லா அரைச் சதம் அடித்தார்.27 பந்தில் 5 பவுண்டரி, 3 சிக்ஸருடன் இந்த ஓட்டத்தை எடுத்தார்.

அரைச்சதம் கடந்த பிஸ்லா ஆட்டத்தில் அனல் பறந்தது.

14.4 ஓவரில் 139 ஓட்டமாக இருந்தபோது பிஸ்லா ஆட்டம் இழந்தார்.

பிஸ்லா 48 பந்தில் 8 பவுண்டரி, 5 சிக்ஸருடன் 89 ஓட்டங்களைக் குவித்தார்.

கொல்கத்தா அணி 15 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 141 ஓட்டங்களை எடுத்திருந்தது.


கடைசி 5 ஓவரில் 50 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலை இருந்தது.

16-வது ஓவரை ஜகதி வீசினார். இந்த ஓவரில் கலிஸ் 2 பவுண்டரி அடித்து அரைச் சதம் அடித்தார். இந்த ஓவரில் 11 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.


17-வது ஓவரை பிராவோ வீசினார். 2-வது பந்தில் சுக்லா ஆட்டமிழந்தார். அடுத்து பதான் களமிறங்கினார்.இந்த ஓவரில் 12 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.

18 பந்தில் 27 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஜகதி 18-வது ஓவரை வீசினார். முதல் பந்தில் பதான் ஆட்டமிழந்தார்.இந்த ஓவரில் 7 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.

19-வது ஓவரை ஹில்பெனாஸ் வீசினார். இந்த ஓவரின் 5-வது பந்தில் கலிஸ் ஆட்டமிழந்தார்.கடைசிப் பந்தை நோபோலாக வீசினார்.இதில் 3 ஓட்டம் கிடைத்தது. நோபோலுக்குப் பதிலாக வீசிய பந்தில் சகிப் அல் ஹசன் சிறப்பாக பவுண்டரி அடித்தார். ஆகையால் கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவை என்ற பரபரப்பான நிலை ஏற்பட்டது.



கடைசி ஓவரை பிராவோ வீசினார்.முதல் பந்தில் திவாரி 1 ஓட்டம் எடுத்தார்.2-வது பந்தில் அல் ஹசன் 1 ஓட்டம் எடுத்தார்.4 பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.3-வது பந்தில் திவாரி அட்டகாசமான பவுண்டரி அடித்தார். இப்போது 3 பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 4-வது பந்தையும் பவுண்டரிக்கு விரட்டி வெற்றியை உறுதி செய்தார்.



19.4 ஓவரில் 192 ஓட்டங்களை எடுத்து சென்னையை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது கொல்கத்தா அணி.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிஸ்லா தேர்வானார்.




கால்ட்டன் சுப்பர் றக்பி செவின் தொடரின் இறுதிப் போட்டி கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நேற்றைய போட்டியை அலங்கரிக்கும் வகையில் பொலிவூட் நடிகர் விவேக் ஒபராய் மற்றும் நடிகை பிரீத்தி ஜிந்தா ஆகியோருடன் இலங்கையின் பிரபல நடிகை அனார்கலி ஆகர்ஷா ஆகியோர் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம்
இப்போட்டியை ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டு பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றுபட்ட இலங்கைக்குள்...

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 வது தேசிய மாநாட்டில் மட்டக்களப்பில் உரையாற்றுகையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை உள்நாட்டுப் போரின் போது இலங்கை அரசாங்கத்துக்கு இராணுவ மற்றும் இராஜதந்திர ரீதியில் ஆதரவினை அப்போது வழங்கிய சர்வதேச சமூகம். இப்போது தமக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்று மாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுக்கத் தொடங்கியுள்ளதாகக் கூறியுள்ள சம்பந்தன்,

போர் முடிந்த பின்னர் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகள் வழங்கப்படும் என்பதே இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதி என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆன நிலையிலும் அந்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் வழங்கத் தவறியதால், சர்வதேச சமூகம் இலங்கையின் மீது தற்போது அழுத்தங்களை பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது என்றும், ஆகவே இந்தத்தருணத்தில் தமிழ் மக்கள் பொறுமைகாக்க வேண்டும்.

ஐக்கிய இலங்கை என்ற அரசமைப்பிற்குள் தமிழர்கள் சுயமரியாதையுடனும், தன்னிறைவுடனும் வாழத் தேவையான ஆகக் கூடிய அரசியல் அதிகாரங்களை உள்ளடக்கிய ஓர் ஆட்சியலகையே தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மை பிரச்சினைக்கான தீர்வாக நாங்கள் கருதுகிறோம்.

தமக்கே உரித்தான அடிப்படை மனித உரிமைகளையும் தம்மைத்தாமே ஆள்வதற்கான நியாயமான அரசியல் அதிகாரங்களையும் கேட்டமைக்காக மட்டுமே பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனால் அரசாங்கத்தின் மீது குறியீட்டு ரீதியான ஓர் உலகக் கண்டனமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் பின்புலமாக செயற்பட்ட வெற்றியின் நிறைவுடன் நாம் இங்கே ஒன்று கூடியுள்ளோம்.

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையில் உலக சமூகத்தினர் அதீத ஈடுபாடு கொண்டுள்ள இந் நேரத்தில் அவர்களோடு நாம் சேர்ந்து இயங்க வேண்டும்.

அவர்களை சர்ச்சைகளுக்குள் சிக்க வைக்கும் விதமாகவோ அல்லது சங்கடத்திற்கு உள்ளாகும் விதமாகவோ நாம் செயற்படுவோமேயானால் அது எமது இனத்தைத் தான் பாதிக்கும்.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கு இதய சுத்தியுடன் செயற்படவில்லை என்பதை உலக சமூகத்தினர் முன் நாம் தெளிவாகக நிரூபிக்க வேண்டும் அதுவரை நாம் பொறுமை காக்க வேண்டும்.

ஒருமித்த இலங்கை என்ற அரசமைப்பிற்குள் ஒரு தீர்வு வேண்டும் என்பதே எமது தெளிவான கோரிக்கை.

அத்தோடு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட வேண்டும். கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

போரில் மீறப்பட்ட மனிதவுரிமைகள் தொடர்பில் சுயமான, சுதந்திரமான, நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

மேலும், சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்தும் தமது இன, மத, பண்பாட்டு அடையாளங்களையும் பாரம்பரியங்களையும் பாதுகாக்க வேண்டுமெனில் அவர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி, அவர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்றிணைவதே ஆகும்.

வெளிப்படையாகவே இராணுவ மயப்பட்ட சூழல் தொடர்ச்சியாக இராணுவப் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு உட்பட்ட வாழ்வு, பொது நிர்வாகச் செயற்பாடுகளில் பாதுகாப்பு தரப்பின் இறுக்கமான தலையீடு,

வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில் இன்னமும் காட்டப்படும் பாரபட்சம், தமிழ்ப் பெண்களினதும் இளைஞர்களினதும் சமூக - பொருளாதார- பண்பாட்டு வாழ்வின் மீது நுட்பமாக உட்செலுத்தப்படும் சீர்கேடுகள்,

வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்யப்படும் சிங்களமயமாக்கல், மீள்கட்டுமான மற்றும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களிலிருந்து தமிழர்களின் பிரதிநிதிகள் திட்டமிட்டு ஓரங்கட்டப்படல்,

கணிப்பிட்டு கச்சிதமாக மாற்றப்பட்டு வரும் தமிழர் தாயகத்தின் குடிப்பரம்பல், தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து தமிழ் பேசும் மக்களின் இன, மத, பண்பாட்டு, வரலாற்றுச் சின்னங்கள் அகற்றப்பட்டு தமிழர்களின் அடையாளத்தை இல்லாமற் செய்யும் நோக்குடன் பௌத்த ஆலயங்களும் மதச் சின்னங்களும் எழுப்பப்படுதல் என இவை எவையுமே நல்லிணக்கத்திற்கான அறிகுறிகள் அல்ல.

இவை எவையுமே தமிழர்களுக்கு நம்பிக்கையையும் அமைதியையும் தருவனவும் அல்ல. எல்லாமே தமிழினத்தை மீண்டும் ஒரு தடவை பெருத்த ஆபத்திற்குள் இட்டுச் செல்வதற்கு இடப்படும் அடிக்கற்கள்தான் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6,8,11)

# புலிச் சந்தேக நபர்களா...

இலங்கை நல்லிணக்க ஆணைக்குழு வினால் மனித வுரிமை மீறல்கள், மீள் நல்லிணக்கம் மற்றும் போர்க்கால நிகழ்வுகளுக்கான பொறுப்புக் கூறல் போன்ற விடயங்கள் குறித்த பரிந்துரைகளை தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மனிதவுரிமைகள் மீறல்கள் இருக்கின்றன என்பதை நான் நேரடியாக ஒப்புக்கொள்கிறேன். இங்கு மீள் நல்லிணக்க நடவடிக்கைகள் தேவையாக இருக்கின்றன.

அதேவேளை போர்க்காலத்தில் நடந்ததாக கூறப்படும் குற்றச்செயல்கள் குறித்து ஆதாரங்களை யாராவ்து சமர்ப்பித்தால் அது குறித்து விசாரிக்க வேண்டும்.

வெறுமனே வதந்திகளின் அடிப்படையிலோ அல்லது பக்க சார்பான நிறுவனங்கள் கூறும் அறிக்கைகளின் அடிப்படையிலோ இந்த விசாரணைகள் நடத்தப்பட முடியாது.

பல்வேறு சமூகங்களின் நலன்களை கருத்தில் கொண்டு அவர்கள் அனைவருக்கும் பலனைத்தரும் வகையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.

போர்க்காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கேட்டதற்கு பதிலளித்த சரத்பொன்சேகா ஆயிரக்கணக்கில் மக்கள் அங்கு கொல்லப்பட்டதாகக் கூறப்படுவதை நான் ஏற்கவில்லை ஆனால் அங்கு எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்பது குறித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்படலாம்.

கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளா என்பது குறித்து இறுதியில் அறிவது மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே அந்தச் சிரமங்களுக்கு மத்தியில் துல்லியமான மதிப்பீட்டை செய்ய முற்பட வேண்டும் என்றார்.

அதிகாரப் பகிர்வுக்குறித்த கேள்விகளுக்கு பதிலளித்த சரத் பொன்சேகா அதிகாரப் பகிர்வு என்பது இன ரீதியில் கையாளப்படக் கூடாது அது அனைத்து இன மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இலங்கையின் ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அந்த விடயத்தில் அவசரப்படக் கூடாது என்றும் குறிப்பிட்டார். (ந-8,11)

# மனித உரிமைகள் பேணப்...

உலகின் முதனிலை ஜனநாயக நாடுகளை விடவும் இலங்கையில் மனித உரிமைகள் பேணப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காவல்துறையினரின் கைதின் பின்னர் எவரும் இதுவரையில் காணாமல் போனதில்லை எனவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக விசேட விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், சித்திர வதைகள் இடம்பெற்று வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் கிடையாது என்றார். (ந-8-11)

# ஐ.நா. பிரதிநிதிகளை இல...

தாகவும் அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக குழு வினர் செயற்பட்டதாகவும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையாளரின் குழுவினரை இலங்கையினுள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வரவேண்டு மாயின் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர். மாத்திரமே வர முடியும் என வெளிவிவகாரதுறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார துறை பிரதியமைச்சர் கருணாதிலக்க அமுனுகம கருத்து வெளியிடுகையில், மனிதவுரிமை ஆணைக்குழு இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய யோசனையிலுள்ள விடயங்களை அரசாங்கத்தின் இணக்கப்பாடின்றி நடைமுறைப்படுத்த முடியாதென குறிப்பிட்டார்.

அதேவேளை மனிதவுரிமைகள் ஆணையாளரின் பிரதிநிதிகளை இலங்கைக்குள் ஏற்பதா இல்லையா என்பது தொடர்பில் இது வரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் அரசாங்கத்தை நிலைகுலைய செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என மின்சக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (ந-8,11)

# ரிசாத்தின் அராஜகம்...

பிரதிநிதிகள் என ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

மத ஆராதனையுடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வின் போது, மன்னார் மறைமாவட்ட ஆயரை தம்புள்ள புத்த பிக்குகளுடன் ஒப்பிட்டு நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கடுமையாக கதைத்தமையினை கண்டித்து பல்வேறு தரப்பினர்களுடைய கண்டன அறிக்கைகளும் வாசிக்கப்பட்டன.

அமைச்சர் ரிசாத்தே உனது அரசியல் அராஜகம் ஒழிக, எம் நிலங்களை அபகரிக்காதே, உன் முத்திரை கிழிக்கப்படும் உன் முகத்திரையழிக்கப்படும், உன் சதிவேலைக்கு நாம் சாய மாட்டோம், உண்மையை உலகிற்கு உணர்த்துவோம், சர்வமத ஒற்றுமையை சாகடிக்க நினைக்காதே, ரிசாத்தே பேசக்கற்றுக்கொள், அமைதியின் ஆயருக்கு அவதூறு கொடுக்க நீ யார்? போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை மக்கள் ஏந்திய வாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் இறுதியாக கண்டனத் தீர்மானம் வாசிக்கப்பட்டு மக்களினால் ஆதரவு தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# தனிமையிலிருந்த...

சென்ற சிலவாரங்களுக்குள்ளேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வீட்டின் ஓட்டினைப் பிரித்து உள் நுழைந்தவர்களினாலேயே குறித்த வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

கொள்ளையர்கள் குறித்த பெண்ணை கொலை செய்துவிட்டு அவரிடம் இருந்த 15 பவுண் தங்க நகைகளை அபகரித்ததுடன் வீட்டையும் சல்லடை போட்டு தேடிய பின் வீட்டின் பின்கதவை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட வயோதிபப் பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-3,6,24)


மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 ரெக்டர் - 23000/-

அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு

(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

(8523)

வங்கியியல் கற்கைகள்

பிரத்தியேக வகுப்புகள் - பிரிவு II

CBF

Managing Information

DBF

Managing Information in Financial Services

- September 2012 பரீட்சைக்குரிய துரித மீட்டல் ஆரம்பமாகவுள்ளன.
- 100% சித்தி உத்தரவாதம்.
- வசதிக்கேற்ப நேர அட்டவணை.
- ஆங்கிலம், தமிழ் மொழி விரிவுரைகள் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்

இல. 7, பலாலி வீதி, (அப்பலோ வைத்தியசாலை அருகில்) யாழ்ப்பாணம். TP: 021 5670345

(C-091)

STUDDS

இந்தியாவின்

NO 1 BRAND

STUDDS HELMET

(தலைக்கவசம்)

இப்பொழுது நமது யாழ் மண்ணில்



- அதிஉயர் தொழில்நுட்பம்
- இரவுப் பார்வைக் கண்ணாடி
- தலை வியர்வை அற்றது
- பாரம் குறைந்தது
- உறுதியானது

தொடர்புக்கு 0772 35 95 35

AP KITCHEN LAPTOP™

124 D, பலாலி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 4749


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.